# கார்காத்தார் ஒப்புரவு

புத்தேள் உலகத்தும் ஈண்டும் பெறல் அரிதே
ஒப்புரவின் நல்ல பிற.

# KARKATHAR OPPURAVU


| மலர்–14, இதழ் – 8<br>Volume - 14, Issue - 8 | ஆடித் திங்கள்<br>July 2023 | விலை ரூ. 25/–<br>Price Rs. 25/- | ஆண்டு சந்தா ரூ. 300/–<br>Annual Subscription Rs. 300/- | தமிழ் மாத இதழ்<br>Tamil Monthly |
|---|---|---|---|---|





"Delivered by India Post"

www.indiapost.gov.in




PICS

Parvathy Institute of
Cardiac Sciences

Complete Cardiac
Care In
The Heart of
Chromepet.

Chromepet : 241, GST Road, Chromepet, Chennai 44.

Website: www.parvathyhospital.com

# Call: 044 2238 2248




**SOLAR ROOF TOP POWER GENERATING SYSTEM**

**SOLAR POWER PLANT - DESIGN, ERECTION & INSTALLATION**

# WHY MARUTHI ?

- INTERNATIONAL STANDARD PANEL WITH 25 YEARS WARRANTY.
- 24 YEARS OF EXPERTISE IN POWER MANAGEMENT.
- END TO END SOLUTION.
- 24 X 7 SUPPORT.

## CUT DOWN YOUR ELECTRICITY COST

**MARUTHI POWER CONTROL SYSTEM**

**CALL US @ 9841828077**

Email - senthil@maruthipower.com

www.maruthipower.com



S.SELVAKUMAR - C.E.O

# FLAT FOR SALE

## POSH LIVING AREA

NO WATER LOGGING - NO STAGNATION

# KOTTURPURAM




DHANDAYUTHAPANI NAGAR, 1st STREET

**1540 Sqft - 3BHK**

(ONLY ONE FLAT IN EACH FLOOR)

Aesthetic Interior
Wood Work, Modular Kitchen,
Power Bakcup

WE UNDERTAKE
Joint Venture of your property
Construction of Individual House
on Total Turn-Key Basis

MALAR HOMES

**94440 70108**
**94443 80012**

**இதழின் உள்ளே....**


சிரிப்பே நல்ல மருந்து தான்........................................... 10

டப்பா வாலாக்கள் – தொழில்....................................... 13

புதிய நாடு உருவாதல்................................................. 16

கலவை தரும் மலைபோல் கவலை............................ 21

நட்சத்திரங்களும் மரங்களும்.................................... 40

மணமகன் / மணமகள் தேவை .......................... 42–47

சங்க நிகழ்வுகள் ............................................................ 48



**கார்காத்தார் ஒப்புரவு**

**கார்காத்தார் சங்கம் (சென்னை)**

64, சௌராஷ்டிரா நகர் 10வது தெரு,

சூளைமேடு, சென்னை – 600 094.

தொலைபேசி : 044–2472 4882

**ஆயுள் சந்தா ரூ. 2000/-**

**ஆண்டு சந்தா ரூ. 300/-**

வெளியீட்டாளர் : **கைலை. சண்முகம்**

ஆசிரியர் : மேலையூர் **S. அன்பழகன்**

அச்சிடுவோர் :
**மீ. நடராஜன்**
**மயூர் பிரிண்டர்ஸ்**
எண். 1/7, கோபால் தெரு,
சைதாப்பேட்டை ரோடு, வடபழனி,
சென்னை – 600 026. போன் : 4204 6533



கதை, கட்டுரைகள், கவிதைகள் மற்றும் செய்திகள், மணமகன்/மணமகள் பற்றிய விபரங்கள், மற்றும் விளம்பரங்களில் வரும் தகவல்களை வாசகர்கள் சரிபார்த்து தீர விசாரித்து முடிவுகள் எடுக்கப்பட வேண்டும். இவைகளுக்கு ''கார்காத்தார் ஒப்புரவு'' நிர்வாகம் பொறுப்பேற்காது.


## ஏடு இட்டோர் இயல்



### படிக்கும் போதே சம்பாதித்தல்

ஜுலை மாதம் பிறந்து விட்டது . பெரும்பாலான கல்லூரிகள் திறந்திருக்கக் கூடும் இது வரை வீட்டிலிருந்த படியே பள்ளிகளுக்குச் சென்று வந்த மாணவர்கள் இந்த ஆண்டிலிருந்து கல்லூரிக்குச் செல்பவர்களுக்கு கல்லூரி என்பது சற்று மாறு பட்ட சூழ் நிலை யாகவும் படிப்பும் சற்று கடினமாகவும் தோன்றலாம் பள்ளிக் கட்டணங்களோடு ஒப்பிடுகையில் கல்லூரிக் கட்டணம் ,மிகவும் உயர்ந்திருக்கலாம் இதனால் புதிதாகச் சேர்ந்த கல்லூரி மாணவர்களின் பெற்றோர் குறிப்பாக நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் நிதி நிலைமை சற்று கடினமாக இருக்கக் கூடும். இந்த நிலைமையைத் தவிர்க்க முடியாது பெற்றோர்கள் நிதிச் சுமையை ஓரளவு குறைக்க கல்லூரியில் படிக்கும் போதே வெளி நாடுகளில் செய்வது போல் கல்லூரியில் படிக்கும் மாணவர்கள் படிக்கும் போதே கல்லூரி நேரம் போக மீதி நேரங்களில் பகுதி நேர வேலைகள் செய்து தன்னால் முடிந்த வரையில் தன் செலவுக்குச் சம்பாதித்து பெற்றோர் நிதிச் சுமையை ஓரளவு குறைக்க முயற்சிக்கலாம்.

அமெரிக்கா போன்ற நாடுகளில் படிக்கும் மாணவர்கள் பகுதி நேர வேலைக்குச் செல்வதற்கு மற்றுமொரு காரணம். அந்நாட்டு வழக்கப்படி மாணவ மாணவிகள் குறிப்பிட்ட வயது வந்த பிறகு 17 / 18 என்று நினைக்கிறேன் பெற்றோரைச் சார்ந்திருப்பதை விட்டு வீட்டை விட்டும் வெளியேறி தங்களுக்குத் தேவையானவற்றைத் தாங்களே சம்பாதித்துக் கொள்ள வேண்டும். அதனால் தான் அவர்கள் படிக்கும் போதே சம்பாதிக்க வேண்டிய கட்டாயத்துக்கு ஆளாகிறார்கள். அவ்வாறு படிக்கும் போதே பகுதி நேர வேலைகளுக்கு அங்கு நிறைய வாய்ப்புகள் உண்டு. அவர்களிடம் உள்ள ஒரு நல்ல பழக்கம் எந்த வேலையையும் பார்க்க கௌரவக் குறைவாக நினைப்பதில்லை. நம்முடைய நாட்டில் கூட உயர் பதவியில் வகித்த சிலர், படிக்கும் காலங்களில் காலை நேரங்களில் சைக்கிளில் வீடு வீடாகச் சென்று பேப்பர் போட்டு சம்பாதித்து தங்கள் செலவுக்கு வைத்துக் கொண்டு படித்ததுண்டு.

வெளி நாடுகளில் இருப்பது போல் பகுதி நேர வாய்ப்புகள் நம் நாட்டில் குறைவு இதனால் தான் நம்நாட்டு மாணவர்கள் படிக்கும் போது பகுதி நேர வேலை பார்த்து சம்பாதிக்க முடிவதில்லை என்று கூறுவோரும் உண்டு. இது தவறு நம் நாட்டு

மாணவர்களுக்கும் படிக்கும் போதே சம்பாதிக்கக் கீழ்க்கண்ட வழிகள் உள்ளன ;–

" பைகள், பொம்மைகள் போன்ற வீடுகளிலேயே கைகளால் செய்யக் கூடிய கைவினைப் பொருட்களைச் செய்தலும் விற்றலும்

" பகுதி நேரங்களில் தன்னை விட குறைந்த வகுப்புகளில் படிக்கும் மாணவர்களுக்கு ட்யூசன் சொல்லிக் கொடுத்தல்

" வணிக நிறுவனங்களில் பகுதி நேர விற்பனையாளராக வேலை செய்தல்

" ஃப்ரீ லான்சிங்க் என்னும் பகுதி நேர வேலையில் மற்றவர்கள் வீடுகளுக்கு பெயிண்ட் செய்தல் வீடு மாற்ற பாக்கிங்க் செய்து கொடுத்தல் போன்ற சேவைகளைச் செய்து கொடுத்தல்

" வீட்டிலிருந்தபடியே பணம் சம்பாதிப்பது எப்படி ? என்ற கேள்விக்கு ப்ளாகிங் ஒரு மிகச் சிறந்த வழியாக இருக்கும். ப்ளாகிங் (Blogging) என்பது ஒரு வலைதளம் மூலம் உங்கள் கருத்துக்களை மற்றவர்களுடன் பகிர்வது. உதாரணத்திற்கு நீங்கள் நாள்தோறும் ஆன்லைனில் படிக்கும் செய்திகள் பிளாக்கிங்–இன் ஒரு வகையே. சமையல் குறிப்பு, கல்வி, பொழுதுபோக்கு, செய்திகள், தொழில்நுட்பம் என அனைத்து தலைப்புகளிலும் கட்டுரை வடிவில் ப்ளாகில் பதிவிடலாம்.

" சந்தைப்படுத்தல் (Affiliate Marketing) என்பது மற்ற நிறுவனங்களின் தயாரிப்புகளை மக்களுக்கு பரிந்துரைத்து, உங்கள் மூலமாக அவர்கள் அந்த தயாரிப்புகளை வாங்கினால் உங்களுக்கு விற்பனைத் தொகையில் இருந்து ஒரு சிறிய தொகை கமிஷனாக உங்களுக்கு வழங்கப்படும்.

இவை போன்ற பல வாய்ப்புகள் உள்ளன அத்தகைய பகுதி வேலைகளில் சம்பாதிக்க ஈடு படுபவர்கள் இரண்டு விஷயங்களை எப்போதும் மனதில் கொள்ள வேண்டும்.

1. பகுதி நேர வேலையில் ஈடுபடும் போது முக்கிய வேலையான படிப்புக்கு உள்ள முக்கியத்துவத்தை விட்டு விடக் கூடாது.

2. திருடாமல் பிறரை ஏமாற்றாமல் செய்யும் எந்த வேலையும் இழிவல்ல என்ற எண்ணம் வேண்டும்.

# ஓர் அறிவிப்பு

கார்காத்தார் ஒப்புரவுக்கு அனுப்பப்படும் சங்க செய்திகள் ஒவ்வொரு ஆங்கில மாதத்தின் 25ஆம் தேதிக்குள் அனுப்படவேண்டும். அதன் பின்னர் பெறப்படும் செய்திகள் அடுத்து வரும் இதழ்களில் பிரசுரிக்கப்படும். சங்க நிகழ்வுகள் பற்றிய செய்திகள் கீழே சங்கத்தின் தலைவர் / செயலரின் கையொப்பம் மற்றும் சங்க முத்திரையுடனும் அனுப்பப்படவேண்டும்.

- செய்திகள், கட்டுரைகளை கூட்டவோ, குறைக்கவோ அல்லது நிராகரிக்கவோ நிர்வாகத்திற்கு உரிமை உண்டு.
- சங்க விழாக்கள் பற்றிய செய்திகள் சுருக்கமாகவும், தெளிவாகவும், முக்கிய கருத்துக்களை உள்ளடக்கியதாகவும், பெயர்களை தவிர்த்தும், பொறுப்பாளர்கள் கையொப்பத்துடன் அனுப்பப்படவேண்டும்.
- E-mail–ல் செய்திகள் அனுப்புவது தவிர்க்கப்பட வேண்டும்.
- **மணியார்டர், காசோலை, DDகள் அனைத்தும் கார்காத்தார் ஒப்புரவு என்ற பெயரில் அனுப்பட வேண்டும்.**

**Online fund Transfer** Account Number : 130801000022149
IFSC Code : IOBA0001308
Account Name : M/S Karkathar Oppuravu
Bank Name and Branch : Indian Overseas Bank/ Choolai Medu - Chennai.

**இந்த QR CODE/UPI யை SCAN செய்தும் பணம் செலுத்தலாம்**

**தொகை செலுத்தியபின் Name, Amount, subscription - ADVT Details, Date of Payment, Transaction ID/UTR Number, Communication Address, Pincode (must), Phone / WhatsApp Number, Screenshot of Payment / Google form (https://forms.gle/rXkimYPnPMCJwtRi8) இந்த விவரங்களை "கார்காத்தார் ஒப்புரவு" Whatsapp No. 8248449204க்கு அனுப்பி வைத்தால் மட்டுமே தங்களது விவரங்கள் update செய்யப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.**

- செய்திகள் பிரசுரிப்பது குறித்து தொலைபேசி / கடித போக்குவரத்து இயலாது.

*அனைத்து தபால்களையும் **கார்காத்தார் ஒப்புரவு,***
***எண். 64, சௌராஷ்டிரா நகர், 10வது தெரு, சூளைமேடு, சென்னை - 600 094.***
***என்ற முகவரிக்கு மட்டுமே அனுப்ப வேண்டும்.***

*- கார்காத்தார் ஒப்புரவு*

உங்கள் இராசியான மயிலாடுதுறையில்
நீங்கள் ஆவலுடன் எதிர்பார்க்கும்

# கார்குல மங்கல சந்திப்பு

மயிலாடுதுறை நகர கார்காத்த வேளாளர் சங்கத்தின் சார்பில் நடத்தப்படும் மங்கல சந்திப்பு நிகழ்வு **மயிலாடுதுறை நகர கார்காத்தார் சங்கக் கட்டடத்தில் 6.08.2023 ஞாயிற்றுக்கிழமை** காலை 9.00 மணியளவில் தொடங்கி நடைபெற உள்ளது.

கார்குல சொந்தங்கள் இந்நிகழ்வினில் கலந்து கொண்டு பயன்பெறவேண்டுகிறோம். பதிவுக்கட்டணம் ரூ.500/-ஐ பதிவு விவரங்களுடன் நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ **01.8.2023** க்குள் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பிட அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

பதிவுக் கட்டணம் மயிலாடுதுறையில் மாற்றத்தக்க வகையில் **DD / Cheque** ஆக **Mayiladuthurai Nagara Karkatha Velalar Sangam** என்ற பெயரில் அனுப்ப வேண்டும்.

தபால் / **M.O** அனுப்பவேண்டிய முகவரி
**T. பன்னீர்செல்வம்** (கம்பன் பிரிண்டர்ஸ்)
(மங்கல சந்திப்பு ஒருங்கிணைப்பாளர்)
32, பூக்கடைத்தெரு, மயிலாடுதுறை- 609 001.
Whatsapp No. 9443507301, Cell No. 6380141270

தபாலில் புத்தகம் பெற விரும்புவோர் ரூ.600/-ம் பதிவு இல்லாமல் தனிப்பிரதி வேண்டுவோர் ரூ.650/-ம் செலுத்த வேண்டும்.

குறிப்பு : விவரங்களை **kambankala@gmail.com** என்ற மின்னஞ்சலிலும் அனுப்பலாம். விண்ணப்பப் படிவத்தைத் தனித்தனி எழுத்துகளில் நிரப்ப வேண்டும். இணையதள முகவரி மற்றும் தொலைபேசி எண்ணைத் தெளிவாகக் குறிப்பிடவேண்டும்.

**S. அன்பழகன்** தலைவர்,
**A. இராஜேந்திரன்** செயலாளர், (பொறுப்பு) **R. சந்திரசேகரன்** பொருளாளர்,
மற்றும் பொறுப்பாளர்கள்.

| | |
|---|---|
| **பெயர்** | : |
| பிறந்த நாள் | : |
| நட்சத்திரம் | : |
| உயரம் | : |
| நிறம் | : |
| கோத்திரம் | : |
| படிப்பு | : |
| பணி விபரம் | : |
| | |
| | |
| ஊதியம் | : |
| தந்தை பெயர் | : |
| பணி விபரம் | : |
| பூர்வீகம் | : |
| தாயார் பெயர் | : |
| பணி விபரம் | : |
| பூர்வீகம் | : |
| தொடர்பு முகவரி | : |
| | |
| | |
| | |
| உடன் பிறப்பு | : ஆண் ☐ பெண் ☐ |
| திருமணம்ஆனவர் | : ஆண் ☐ பெண் ☐ |
| திருமணம்ஆகாதவர் | : ஆண் ☐ பெண் ☐ |
| விருப்பம் & | : |
| இதர தகவல் | |
| | |
| தொலைபேசி | : |
| செல் | : |
| **E.mail** | : |

# தமிழ்நாடு கார்காத்தார் சங்க கூட்டமைப்பு
## புதுச்சேரி கிளை

# கார்குல சொந்தங்கள் சந்திப்பு மற்றும் "கார்காத்தார் ஒப்புரவு" எழுச்சி விழா அழைப்பிதழ்

அன்புடையீர் ! வணக்கம்,

நாளது **13-08-2023 ஞாயிற்றுக்கிழமை** காலை 9.00 மணிமுதல் 1.00 மணிவரை புதுச்சேரி, ECR Road, SH 49, பாக்குமடையான் பட்டு, அண்ணாமலை நகர், **ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி திருமண மண்டபத்தில்** புதுவை கார்காத்தார் சங்கத்தின் கார்குல சொந்தங்கள் சந்திப்பு நிகழ்ச்சி மற்றும் "கார்காத்தார் ஒப்புரவு" எழுச்சி விழாவும் நடைபெறவுள்ளது.

**தலைமை :** திரு. **M.A.J. ராஜேந்திரன் பிள்ளை** அவர்கள்
மாநில துணைத்தலைவர் கார்காத்தார் சங்க கூட்டமைப்பு

**முன்னிலை :** **Dr. C. வைத்திலிங்கம் பிள்ளை** அவர்கள்
Managing Director, Romvijay Biotech (P) Ltd.,

**வரவேற்புரை :** திரு. **J. ராஜன்பாபு பிள்ளை** அவர்கள்
தலைவர், கார்காத்தார் சங்கம், புதுச்சேரி கிளை.

**சிறப்புரை :** திரு. **G. பத்ம நாபன் பிள்ளை** அவர்கள்

திரு. **G. ஞானசேகரன் பிள்ளை** அவர்கள்

திரு. **சு. வெங்கடேசன் பிள்ளை** அவர்கள்
செயலாளர், கார்காத்தார் சங்கம், புதுச்சேரி கிளை.

**Dr. A. சேதுமாதவன் பிள்ளை** அவர்கள்
நிர்வாக இயக்குநர், சேது நர்சிங் ஹோம், புதுச்சேரி

திரு. **G. முத்துகுமார சுவாமி பிள்ளை** அவர்கள்
மண்டல செயலாளர், கார்காத்தார் சங்கம் கூட்டமைப்பு, காரைக்கால்

**மற்றும் கலைநிகழ்ச்சிகள்**

## “கார்காத்தார் ஒப்புரவு” எழுச்சி விழா

**தலைமை** : திரு. **சபா. சிவகுமார்** அவர்கள்,
தலைவர், சென்னை கார்காத்தார் சங்கம்

**முன்னிலை** : மேலையூர். திரு. **ச. அன்பழகன்** அவர்கள்
ஆசிரியர் கார்காத்தார் ஒப்புரவு

**வரவேற்புரை** : திரு. **கைலை சண்முகம்** அவர்கள்
செயலாளர், சென்னை கார்காத்தார் சங்கம்
பதிப்பாசிரியர் “கார்காத்தார் ஒப்புரவு”

**சிறப்பு விருந்தினர்கள்**

திரு. **K.K.R.K. சுரேஷ் (எ) இராஜசுந்தரம்,** அவர்கள்
தலைவர், மாநில கார்காத்தார் சங்க கூட்டமைப்பு

திரு. **M. பாலசுப்ரமணியன்,** அவர்கள்
பொதுச்செயலாளர், மாநில கார்காத்தார் சங்க கூட்டமைப்பு

திரு. **G. இராமநாதன்,** அவர்கள்
பொருளாளர், மாநில கார்காத்தார் சங்க கூட்டமைப்பு

**வாழ்த்துரை** : திரு. **கனக. சுப்ரமணியன்** அவர்கள்
துணைத்தலைவர், சென்னை கார்காத்தார் சங்கம்

திரு. **S. ஞானசேகரன்,** அவர்கள்
பொருளாளர், சென்னை கார்காத்தார் சங்கம்

திருமதி. **வனஜா இளங்கோவன்** அவர்கள்
நிர்வாகக்குழு உறுப்பினர் “ கார்காத்தார் ஒப்புரவு”

**விழா சிறப்புரை** : திரு. கேப்டன். **M. பிரதாபன்** அவர்கள்
கௌரவத்தலைவர் கார்காத்தார் சங்கம், புதுச்சேரி கிளை.

**விழா பேருரை** : திரு. **M. சுவேதகுமார்** அவர்கள்
“சாரதாராம் குழுமம்” சிதம்பரம் & புதுச்சேரி

**நன்றியுரை** : திரு. **G. தியாகராஜன்** அவர்கள்
இணையாசிரியர், “ கார்காத்தார் ஒப்புரவு”

இப்படிக்கு,
**தலைவர் மற்றும் நிர்வாககுழு,**
**கார்காத்தார் சங்கம், புதுச்சேரி கிளை**

இடம் : புதுச்சேரி.
நாள் : 28-06-2023

## சிரிப்பே நல்ல மருந்து தான்.

குழந்தை ஒரு நாளில் 400 முறை சிரிக்கிறது. பருவ வயதை எட்டியவர்கள் 17 முறை சிரிக்கிறார்கள். பல பெரியவர்கள் ஒரு முறை கூட சிரிப்பதில்லை. சிரிக்காமல் இருப்பது கற்பிக்கப்பட்ட பழக்கம் என்றே கூறலாம்.

மன அழுத்தம் ஏற்படுவதற்கான ஒரு காரணம் சிரிக்காமல் இருப்பதே ஆகும். சிரித்து வாழ்ந்தால் மன அழுத்தம் குறைந்து விடுகிறது. சிலர் உயர்ந்த பதவியில் இருப்பதால் சிரிப்பதில்லை. சிரித்தால் அவர்களது கௌரவம் குறைந்து போய் விடும் என்று நினைக்கிறார்கள். காவலர்களைப் பார்த்து நான் சிரிப்பேன். அப்போது அவர்கள் சிரிக்கத் தயங்குவார்கள். என்னிடம் பழகிய பின்னர் மனம் விட்டுப் புன்னகை புரிந்து விடுவார்கள்.

நமது மனநிலையின் தன்மைக்கேற்ப உடலில் வேதியில் மாற்றங்கள் நிகழ்கின்றன. எடுத்துக்காட்டாக, ஒரு வாகனம் நம்மை நோக்கி மோத வருகிறது என்றால் நாம் பயந்து வியர்த்து விடுகிறோம். டாக்டர் ஓர் ஊசி போடும் போது கூட பதட்டம் அடைந்து உடலையே இறுக்கி கொள்கிறோம். ஆனால் ஒரு குண்டூசி கையில் குத்திவிட்டால் அவ்வளவு இறுக்கம் இல்லை.

வரும் ஆபத்தைப் பற்றிச் சிந்திப்பதால் மூளையில் வேதியியல் மாற்றங்கள் ஏற்படுகின்றன. இது மனிதனின் பரிணாம வளர்ச்சியில், புலி துரத்தும் போது ஓடவும், புலியை எதிர்த்துப் போராடவும் ஏற்பட்ட வேதியியல் மாற்றங்களாகும். ஆதி மனிதர்கள் இதுபோன்ற ஆபத்துக்களை எப்போதாவது ஒருமுறை சந்தித்திருந்தனர்.

ஆனால், இந்த நவீன உலகில் மன உளைச்சல் தினமும் பலமுறை ஏற்படுகிறது. அடிக்கடி இது போன்ற வேதியல் மாற்றத்திற்கு உள்ளாகிறோம். நோய் வாய்ப்படுதல், தொழில் நஷ்டம், சொத்துச் சண்டை, பிள்ளைகளின் ஊதாரித்தனம், கடன் தொல்லை போன்ற நிகழ்வுகள் மனிதனின் உடல் வேதியல் மாற்றங்களை ஏற்படுத்துகின்றன. இதனால் மகிழ்ச்சி போய்விடுகிறது. உடல் நலம் கெடுகிறது. உடல் நோய் எதிர்ப்பு சக்தியும் குறைகிறது.

எனவே, எந்த சூழ்நிலையிலும் மகிழ்ச்சியாக இருக்க பயிற்சி மேற்கொள்ள வேண்டும். அதையும் மீறி மகிழ்ச்சியாக இருக்க முடியவில்லை என்றால், மனவருத்தத்திற்கான காரணத்தைக் கண்டறிந்து அதை உடனே களைய வேண்டும். நல்ல எண்ணங்களுடனும், நல்ல மனப்பான்மையுடனும், மகிழ்ச்சியுடனும் இருப்பவர்களுக்கு உடல்நலம் நன்றாக இருக்கும். முதுமை எளிதில் வந்துவிடாது.

சிரிப்பு ஒரு நல்ல மருந்து என்பது பழமொழி. சிரிப்பதால், உடல் நல்ல வேதியல் மாற்றங்கள் ஏற்பட்டு நமது இறுகிய தசைகள், தளர்கின்றன. சிரிக்கப் பயன்படும் தசைகள் முகத்தைத் தளரச் செய்கின்றன. வாய்விட்டுச் சிரிக்கும்போது, எடுக்கும் ஆழ்ந்த சுவாசம் நுரையீரலை விரியச் செய்கிறது. இதன் மூலம் உடல் ஆக்ஸிஜன் அதிகம் வினியோகிக்கப்படுகிறது. சிரிக்கும் போது நமது மூளையில் Endorphin என்ற திரவம் சுரக்கிறது. இது நம்மை அதிக நேரம் மகிழ்ச்சியுடன் இருக்கச் செய்கிறது. மன அழுத்தம் நீங்கிவிடுகிறது.

**நகைச்சுவையை ரசியுங்கள் :**

மற்றவர்களைப் பார்த்து புன்னகை புரிவதையே சிரித்தல் என்றேன். வாய்விட்டு சிரிப்பதும் நல்ல மருந்து தான். அன்றாடம் பத்திரிக்கைகளில் நகைச்சுவைகள் வெளியாகின்றன. அவற்றைப் படித்து வாய்விட்டுச் சிரிக்கலாம். தொலைக்காட்சியில் நகைச்சுவை நிகழ்ச்சிகள் ஒளிபரப்பு செய்யப்படுகிறது. அவற்றைப் பார்த்து சிரிக்கலாம்.

மகாத்மா காந்தியே நகைச்சுவையை விரும்பி இருக்கிறார். ''எனது வாழ்க்கையில் நகைச்சுவை இல்லை என்றால் நான் எப்போதோ இறந்து போயிருப்பேன். என்றார் அவர்.

**சமீபத்தில் நான் கேட்ட சில நகைச்சுவைகள்:**

புவியியல் ஆசிரியர் ஒருவர், உலக வரைபடத்தைத் தொங்கவிட்டுக் கொண்டு, ஒவ்வொரு நாட்டையும் காட்டுகிறார். அப்போது அந்த உலக வரைபடம் கீழே விழுந்து விடுகிறது. ஆசிரியர் அதைக் காலால் மிதித்து விட்டார். ஒரு மாணவர் ஆசிரியரைப் பார்த்து ''சார்'' என்றான். ''என்ன ?'' என்று கேட்டார் ஆசிரியர். ''இந்த உலகம் உங்கள் காலடியில்'' என்றான் மாணவன். வகுப்பில் உள்ள அனைத்து மாணவரும் சிரித்துவிட்டனர்.

ஒரு தொடக்கப்பள்ளி. முதல் வகுப்பில் ஆசிரியர் ஒருவர் ''சொர்க்கம்'' என்றால் என்ன என்பது பற்றியும் ''நரகம்'' என்றால் என்ன என்பது பற்றியும் விளக்கினார். பின்னர் யார் யார் என்னுடன் சொர்க்கத்திற்கு வருகிறீர்கள் என்று கேட்டார். ஒரு சிறுமியைத் தவிர அனைத்து குழந்தைகளும் கைகளைத் தூக்கினர். அந்த மாணவியிடம் ஆசிரியர் ''நீ சொர்க்கத்திற்கு ஏன் வரவில்லை ?'' என்று கேட்டார். அதற்கு அந்த சிறுமி ''எங்கம்மா பள்ளியிலிருந்து நேராக வீட்டிற்குத் தான் வரவேண்டும், வேறு எங்கும் போகக்கூடாது என்று சொல்லியிருக்காங்க'' என்றாள்.

வாய்விட்டுச் சிரிப்பது, புன்சிரிப்புப் போல் நோய் தடுக்கும் சக்தியைத் தரும் ஒரு யுக்தி முறையாகும்.

* தெரியாது என்று சொல்வதற்கும் கிடையாது என்று சொல்வதற்கும் வித்தியாசங்கள் இருக்கின்றது.

* தெரியாது என்றால் எனக்கு தெரியவில்லை என்று அர்த்தம்.

* கிடையாது என்றால் இவ்வுலகத்தில் உள்ள அனைத்தையும் அறிந்த நானே கூறுகிறேன் அப்படி ஒன்றும் கிடையாது என்று அர்த்தம்.

எனவே நாம் கற்றது கை மண்ணளவு; கல்லாதது உலகளவு; என்பதை கருத்தில் கொண்டு செயல்பட வேண்டும்.

"கஷ்டம் யாருக்குத்தான் இல்லை. உனக்கும் கீழே உள்ளவர் கோடி; நினைத்துப் பார்த்து நிம்மதி தேடு."

"யாரிடம் எதையும் எதிர்பார்க்காதீர்; சுதந்திரமாக வாழ்வதற்குரிய ஒரே தகுதி இது தான்."

"பசித்தவனுக்கு மீன்களைக் கொடுத்து உதவுவதைக் காட்டிலும், எப்படி மீன் பிடிப்பது என்பதை கற்றுக் கொடுத்தால், வாழ்க்கையில் முன்னேறுவான்."

"பணம் இருந்தால் உன்னையே உனக்கு தெரியாது. சேவை குணம் இல்லாவிட்டால் உன்னை யாருக்கும் தெரியாது."

எனவே, அனைவரும் மகிழ்ச்சியாக இருங்கள். வாய்விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப் போகும். நல்லதே நினைப்போம் நல்லதே நடக்கட்டும்.

– அர்ச்சனா சுவேதாரண்யம், சென்னை–90.

செல் : 9943702054

# சென்னை கார்காத்தார் சங்கம்

64, சௌராஷ்டிரா நகர், 10வது தெரு, சூளைமேடு, சென்னை–600094.

நமது சென்னை கார்காத்தார் சங்கத்தின் கார்காத்தார் ஒப்புரவு பத்திரிகையின் எழுச்சி விழாவை தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் பகுதி வாரியாக நடத்த திட்டமிடபட்டு முதலில் "கார்காத்தார் ஒப்புரவு எழுச்சி விழா" புதுச்சேரியில் வருகின்ற ஆகஸ்டு மாதம் 13–ம் தேதி ஞாயிறு அன்று நடத்துவதற்கு புதுச்சேரி கார்காத்தார் சங்கமும் சென்னை கார்காத்தார் சங்கமும் இணைந்து ஏற்பாடுகளை செய்து வருகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

விழாவிற்கு அனைத்து ஏற்பாடுகளையும் புதுச்சேரி கார்காத்தார் சங்கத்தின் நிர்வாகிகள் முன்னெடுத்து செய்து வருகிறார்கள். மேலும் விழாவினை

**ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி திருமண மண்டபம்,**

100அடி சாலை, ECR ரோடு, பாக்கமுடையான்பேட்டை, புதுச்சேரி–605008.

லதா ஸ்டீல் கம்பெனி அருகில்

நடத்துவதற்குரிய ஏற்பாடுகளை செய்துள்ளார்கள். மேலும் ஆகஸ்டு மாத கார்காத்தார் ஒப்புரவு இதழை புதுச்சேரி சிறப்பு இதழாக வெளியிடவும் தீர்மானிக்கப்பட்டு புதுச்சேரி சார்ந்த செய்திகள், கட்டுரைகள், இடம் பெறும் சிறப்பு மலராக வெளியிடவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

புதுச்சேரி கார்காத்தார் சங்கத்தின் ஆண்டு விழாவுடன் கார்காத்தார் ஒப்புரவு எழுச்சி விழாவையும் சேர்ந்து கொண்டாட எல்லோரது ஒத்துழைப்பையும் அன்புடன் வேண்டுகிறோம்.

புதுச்சேரி விழாவினை தொடர்ந்து மற்ற ஊர்களிலும் கார்காத்தார் ஒப்புரவு எழுச்சி விழாவை நடத்த முடிவு செய்துள்ளோம். விழா நடத்த ஆர்வமுள்ள சங்கங்கள் சென்னை கார்காத்தார் சங்கத்தினை தொடர்பு கொள்ள அன்புடன் வேண்டுகிறோம்.

– கைலை. சண்முகம்,
செயலாளர்

***அட்டையில் :*** சீர்காழி அருள்மிகு சட்டநாத சுவாமி திருக்கோயில் குடமுழுக்கு விழா பற்றிய படங்கள் ஜூன் 2023 மாத கார்காத்தார் ஒப்புரவு இதழில் வெளியிடப்பட்டது. மேற்படி இதழை தருமபுர ஆதினம் மகா சன்னிதானம் அவர்களிடம் நேரில் வழங்கி ஆசி பெற்றோம்.

– கைலை. சண்முகம், பதிப்பாசிரியர் – கார்காத்தார் ஒப்புரவு



## நவ நரசிம்மர் தரிசனம்

தொடர்ச்சி...

திருமதி. வனஜா இளங்கோவன்

டோலியில் சென்ற நாங்களும், மாலோல நரசிம்மர் வரை தரிசித்து வந்தவர்களும் சுமார் 2½ மணி அளவில் கீழிறங்கி விட்டோம். எங்களுக்காக காத்திருந்த பயண ஏற்பாட்டாளர்களுக்கும், திரு. தியாகராஜன் அவர்களுக்கும் எத்தனை முறை நன்றி கூறினாலும் அது போதாதென்றே நினைக்கிறேன். ஜ்வாலா நரசிம்மர் சென்றவர்கள் வர நேரம் ஆகும் என அறிந்து, நாங்கள் மலையிலிருந்து கீழிறங்கி மீதி மூன்று நரசிம்மர்களைத் தரிசிக்கச் சென்றோம். ஏனெனில் காட்டுக்குள் செல்ல மதியம் 3 மணிக்கு மேல் ஜீப் கிடையாது. கீழிறங்கியதும், இடது புறம் ஒரு அழகிய கோவில். கருடாத்ரி மலைத்தொடரின் மேற்குப் புறம் அமைந்துள்ளது. 'கரஞ்ச நரசிம்மர்' ஆலயம். அண்மையில் புதுப்பிக்கப்பட்டுள்ளது. முகப்பு மண்டபத்தின் இடது புறம் கலியுக வரதன் ஆஞ்சநேயப் பெருமானின் சந்நிதி உள்ளது. தன் முகத்தைத் திருப்பி நரசிம்மரின் சந்நிதி நோக்கி வணங்கிய வண்ணம் உள்ளார். இங்கு நரசிம்மர் வில் ஏந்தி காட்சியளிக்கும் கோலத்தில் அருள்கிறார். ஆஞ்சநேயர் கரஞ்ச மரத்தின் (கருங்காலி மரம்) கீழ் இராமரை நோக்கி பலகாலம் தவமிருக்க, அவர் முன்னே அழகிய சிங்கராக, பெருமாள் தோன்றினார். அனுமன் திருப்தி அடையாததால், இரண்டு அவதாரமும் நானே! என ஆதிசேஷன் குடைபிடிக்க, வலது கையில் சக்கரமும், இடது கையில் வில்லும் ஏந்தி காட்சியளிக்கிறார். இவர் கேதுவினால் ஏற்படும் தோஷங்களை நீக்குபவர்.

அடர்ந்த காட்டுக்குள் இரண்டு நரசிம்மர்கள். ஒரு ஜீப்புக்கு Rs.3000 கட்டணம். ஆறு அல்லது 7 நபர்கள் செல்லலாம். சாலை என்ற ஒன்றே இல்லாத பாதையில் ஜீப் எங்களைப் புரட்டி எடுத்து, இடுப்பு, முதுகு, கழுத்தெலும்பு முறிந்துவிடுமோ என்ற அச்சத்துடனே பயணித்தோம். ஏழு கிலோ மீட்டர் பயணித்து, பாவன நரசிம்மர் கோவிலை அடைந்தோம். அடுத்த நாள் நரசிம்மரின் நட்சத்திரமான சுவாதி என்பதால், 'செஞ்சு' என்று கிருதயுகத்தில் அழைக்கப்பட்ட மலைவாழ் மக்கள் டிராக்டர், டிப்பர் லாரி போன்ற வாகனங்களில், ஆடுகள், கோழிகளுடன் கூட்டம், கூட்டமாக வந்த வண்மாயிருந்தனர். அவர்களுக்கு நேர வரைமுறை இல்லை. இரவு அங்கேயே திறந்த வெளியில் கூடாரம் அமைத்து தங்கி, இரவு பலி கொடுத்து வணங்குவர் என தெரிந்து கொண்டோம். இம் மலை வாழ் மக்களின் இடையே தோன்றியவள்தான் மகாலட்சுமியின் அவதாரமான செஞ்சு லட்சுமி. தேவிக்குப் பிரியமான உணவைப் படைப்பதற்காக, இன்றளவும் இம்மலை மக்கள் பலி கொடுத்து வருகின்றனர். பவன நதிக்கரையில் ஏழுதலை ஆதிசேஷன் குடைபிடிக்க, சாந்த சொரூபமாய் செஞ்சுலட்சுமி தேவியை இடது மடியில் இருத்திய வண்ணம், பாவனநரசிம்மர் வீற்றிருக்கின்றார். இவர் ராகு தோஷத்துக்குரிய நரசிம்மராவார். சென்றுதரிசிக்க மிகவும் கடினமானவை எனில் இந்த பாவன நரசிம்மரும், ஜ்வாலா நரசிம்மரும் தான். காட்டிலிருந்து வெளியேறி தார்ச்சாலையில் சிறிது தூரம் பயணித்து, மீண்டும் காட்டுக்குள் சாலையே இல்லாத மலைப்பயணம், ஏற்ற இறக்கங்கள் அதிகம்; நாற்புறமும் மலைக்குன்றுகள். இயற்கை அழகு கோலோச்சும் அற்புத அழகைத் தரிசிக்க இயலாமல் பயணம் மிகவும் இம்சித்தது என்றால் அது மிகையன்று. சிறு குன்றின் மேல் அமைந்துள்ள ஆலயத்திற்கு, சிறிது தூரம் மலையேறிய பின் 130 செங்குத்தான படிகளேறிச் சென்று ஹிரண்யவதைத் தோற்றத்தில் கையில் ஒரு வாள் இருப்பது வித்தியாசமாக இருந்தது. இவர் 'பார்கவ நரசிம்மர்', சந்திரனின் தோஷத்தை நீக்குபவர். பார்க்கவராமர் என அறியப்பட்ட பரசுராமரின் வேண்டுகோளுக்கு இணங்க நாராயணர் தன் தசாவதாரக் கோலம் காட்டிய தலம். சுவாமியின் பாதத்தருகே பிரகலாதன் தொழுத நிலையிலும், சந்நிதிக்கு வெளியே மகாவிஷ்ணுவும் காட்சி தருகின்றனர்.

**நவ நரசிம்மர்களையும் தரிசித்தது, நான் செய்த புண்ணியமென்றே கருதுகிறேன். இதற்கருளிய இறைவனை மனதில் போற்றி வணங்குகிறேன்.

## டப்பா வாலாக்கள் - தொழில் நேர்த்திக்கு ஒரு முன் மாதிரி

Dr. D. Kalyanakumar, Trichy-18.

நீங்கள் வேலைக்குப் போவதற்காகத் தினமும் காலையில் ஐந்து மணிக்கெல்லாம் வீட்டை விட்டு கிளம்பி விடுகிறீர்கள் மத்தியானத்தில் வீட்டுச் சாப்பாடு கிடைத்தால் எப்படியிருக்கும். அதுவும் உங்களுக்குப் பிடித்த மாதிரி இருந்தால் ஒரு பிடி பிடித்துவிடுவீர்கள்தானே! இந்தியாவிலுள்ள மும்பையில் பணிபுரிகிற ஆயிரக்கணக்கானோர் இந்த விஷயத்தில் கொடுத்துவைத்தவர்கள். ஆம். டப்பாவாலாக்கள் இருக்கும் வரையில் அவர்களுக்கு என்ன கவலை? அவர்கள்தான் வீட்டுச் சாப்பாட்டை அலுவலகத்திற்கே கொண்டு வந்து கொடுக்கிறார்களே! டப்பா என்றால் சாப்பாடு எடுத்துச்செல்லும் டிபன் கேரியர். டப்பா வாலாக்கள் என்றால் சாப்பாடு எடுத்துச்செல்லும் நபர் என்றுதான் அர்த்தம். சாப்பாடு கூடைக்காரி என்று சென்னை வாசிகளுக்குச் சொன்னால் புரியும்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் மும்பை (அப்போது பாம்பே என அழைக்கப்பட்டது. வளர்ந்துவரும் வர்த்தக மையமாகத் திகழ்ந்தது. அந்தச் சமயத்தில் ஆங்கிலேய வியாபாரிகளும் சரி இந்திய வியாபாரிகளும் சரி தங்களுடைய அலுவலகங்களுக்கு வெகு தூரம் பயணிக்க வேண்டியிருந்தது. வாகனங்கள் மந்தகதியில் ஓடின. ஓட்டல்களும் குறைவாகவே இருந்தன. அலுவலகத்திற்குச் செல்வோர் வீட்டுச் சாப்பாட்டையே விரும்பியதால் வீட்டிலிருந்து அலுவலகத்திற்கு மதிய உணவைக் கொண்டு தர வேலையாட்கள் அமர்த்தப்பட்டார்கள். தொழிலில் தொலைநோக்கு பார்வையுடைய ஒருவர் இந்த சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்திக் கொண்டார். கிராமப் புறங்களில் வேலையில்லாமல் இருந்த இளைஞர்களை வேலைக்கு அமர்த்தி வீடுகளிலிருந்து அலுவலகங்களுக்குச் சாப்பாட்டை எடுத்துச் செல்லும் தொழிலைத் தொடங்கினார். சிறியதாய்த் துவங்கப்பட்ட அந்தத் தொழில் சக்கைப்போடு போட ஆரம்பித்தது.

வீட்டுச் சாப்பாட்டிற்கான மோகம் இன்றும் குறையவே இல்லை. இப்போது திரும்பிய பக்கமெல்லாம் ஓட்டல்கள் இருப்பது உண்மைதான். ஆனாலும் ஓட்டல் சாப்பாட்டைவிட வீட்டுச் சாப்பாடுதான் அதிக செலவில்லாதது. எல்லாரும் விரும்புவது அதுமட்டுமல்ல. நிறையப் பேருக்கு உடல்நலப் பிரச்சினைகள் இருப்பதால் அவர்கள் பத்திய உணவையே சாப்பிட வேண்டியிருக்கிறது. மற்ற சிலரோ மதக் கட்டுப்பாடுகள் காரணமாக எல்லா வகையான உணவுகளையும் சேர்த்துக்கொள்வதில்லை. சிலருக்கு வெங்காயம் ஆகாது. இன்னும் சிலருக்குப் பூண்டு பிடிக்காது. இதையெல்லாம் ஓட்டல்சாப்பாட்டில் சேர்த்திருப்பார்கள். வீட்டிலிருந்து அலுவலகத்திற்கு உணவைக்கொண்டு செல்வது இந்தப் பிரச்சினைகளுக்கெல்லாம் பரிகாரமாக இருக்கும்.

தலையில் வெள்ளை நிற தொப்பி.... வெள்ளை நிற பைஜாமா, சைக்கிள்.... எளிமையான தோற்றம்; வேகமான நடை இவர்கள்தான். தினமும் இரண்டு லட்சம் பேருக்கு, மதிய உணவை வீட்டிலிருந்து எடுத்துச் செல்லும், மும்பை டப்பா வாலாக்கள் நூறு ஆண்டுகளுக்கும் மேலாக வீட்டு சாப்பாட்டை அலுவலகத்திலும் பள்ளிகளிலும் கொண்டுபோய் சேர்க்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர் இவர்கள். மும்பை டப்பா வாலாக்கள், தினமும் இரண்டு லட்சம் பேருக்கு சேவையாற்றி வருகின்றனர். ஒவ்வொரு நாளும் இரண்டு முறை என்ற வகையில், நான்கு லட்சம் பேர் பயனாளியாகின்றனர். காலை 10.30 மணிக்கு துவங்கும் பணி, மாலை 6.30 மணிக்கு தான் நிறைவு பெறுகிறது. குறைந்த சம்பளத்தில், நிறைவான பணியாக இதை செய்து வருகிறார்கள். மும்பைவாசிகள் மிகவும் பரபரப்பாக செயல்படக்கூடியவர்கள். ரயிலில் இடம் கிடைக்காது. மிகவும் நெரிசலான சூழ்நிலையில் தான் பயணிக்க வேண்டிய கட்டாயம் உள்ளது.

இதில், மதியஉணவை எடுத்துச் செல்வது மிகவும் கடினம் சுகாதாரமான வீட்டுச் சாப்பாடு. சரியான நேரத்துக்கு கொண்டு சேர்ப்பதால், டப்பா வாலாக்களுக்கு இங்கு இன்னும் 'டிமாண்ட்' இருக்கிறது தினமும் 15 கேரியர்கள் வரை எடுத்துச் செல்லும் இவர்கள். அதிகபட்சம் சைக்களில்தான் பயணம் செய்கின்றனர். நீண்ட தூரத்திற்கு மட்டும் ரயிலை பயன்படுத்துகின்றனர். அவர்கள் தங்களுடைய ஏரியாவில் உள்ள வாடிக்கையாளர்களின் வீடுகளிலிருந்து ஆங்காங்கே சிதறிக்கிடக்கிற அலுவலகங்களுக்கு உணவை எடுத்துச் செல்கிறார்கள். சுமார் 60 கிலோமீட்டர் (40 மைல்) சுற்றளவுக்குள் இந்த டப்பாவாலாக்கள் வலம் வருகிறார்கள். சிலர், 30 அல்லது 40 டிஃபன் கேரியர்களைத் தள்ளுவண்டிகளில் எடுத்துச் செல்கிறார்கள். இன்னும் சிலர், சைக்கிள்களிலோ ரயில்களிலோ எடுத்துச் செல்கிறார்கள். எப்படியானாலும் அவர்கள் உரிய உணவை, உரிய நபரிடம், உரிய சமயத்தில் சேர்த்துவிடுகிறார்கள். சொல்லப்போனால், 60 லட்சம் பேருக்கு சாப்பாடு எடுத்து செல்கிறார்கள்.

இந்த சேவையை விட சமுதாய சேவையிலும், டப்பாவாலாக்கள் பெரிதும் உதவி வருகின்றனர். விழாக்களின்போது வீணாகும் உணவு பொருளை எடுத்து சென்று, ஏழை எளியவர்களுக்கு சேர்க்கின்றனர். பழைய உடைகளையும் சேகரித்து, அவற்றை சுத்தம் செய்து வழங்குகின்றனர். உணவின்றி வாடும் குழந்தைகளுக்கு, வீணாகும் உணவு பொருளை சேகரித்து, ஒவ்வொரு நாளும் அளிக்கின்றனர்.

இந்த டப்பாவாலாக்கள் ஒரு செயற்குழுவையும் சில அலுவலர்களையும் கொண்ட தர்ம ஸ்தாபனமாகப் பதிவு செய்யப்பட்டார்கள். பணியாளர்கள் தனிதனிக் குழுக்களாகச் செயல்படுகிறார்கள். ஒவ்வொரு குழுவுக்கும் ஒரு சூப்பர்வைஸர் இருப்பார் என்றாலும், இந்த அமைப்பிலுள்ள எல்லாருமே பார்ட்னர்கள். பங்குதாரர்கள், அப்படிச் செயல்படுவதுதான் தங்கள் வெற்றியின் ரகசியம் என அவர்கள் பெருமையாகச் சொல்லிக்கொள்கிறார்கள். இந்தச் சேவை ஆரம்பமாகி 100 வருடங்களுக்கும் மேலாகிவிட்டது. ஆனால் இதுவரையில் அவர்கள் வேலைநிறுத்தப் போராட்டங்களில் இறங்கியதே இல்லை. டப்பாவாலாக்களிடம் ஓர் அடையாள அட்டை இருக்கும் அவர்கள் அணிந்திருக்கும் வெள்ளை சட்டை தொள தொள பேன்ட். வெள்ளை தொப்பி இவற்றை வைத்து அவர்களை எளிதில் அடையாளம் கண்டுகொள்ளலாம். அவர்கள் தொப்பியை அணியாதிருந்தால் தகுந்த காரணமின்றி வேலைக்கு வர தாமதித்தால் அல்லது வராமலிருந்தால்... பணியில் இருக்கும்போது மது அருந்தியிருந்தால்... அபராதம் கட்ட வேண்டியிருக்கும்.

காலை 8.30 மணிக்குள் டப்பாவாலா தன்னுடைய பகுதியிலுள்ள வாடிக்கையாளர்களின் வீடுகளிலிருந்து டிஃபன் கேரியர்களை எடுத்து வந்து சைக்கிளில் அல்லது தள்ளுவண்டியில் வைத்து ரயில் நிலையத்திற்கு விரைவார். அவருடைய குழுவிலுள்ள மற்றவர்களும் அங்கு வருவார்கள். அவர்கள் அந்த கேரியர்களையெல்லாம் அவை போய்ச் சேர வேண்டிய இடம் வாரியாகப் பிரிப்பார்கள். போஸ்ட்மேன் தபால்களை இடம் வாரியாகப் பிரிப்பது போல்.

ஒவ்வொரு கேரியரிலும் எழுத்துக்களையும் எண்களையும் கொண்ட வெவ்வேறு நிறக் குறியீடு இருக்கும். வாடிக்கையாளரின் வீடு இருக்கிற இடம், அடுத்துள்ள ரயில் நிலையம், போய்ச் சேர வேண்டிய ரயில் நிலையம், அலுவலக கட்டிடத்தின் பெயர், தளத்தின் எண் என இவை எல்லாவற்றையும் அந்தக் குறியீட்டிலிருந்து கண்டுபிடித்து விடலாம். ஒவ்வொரு பகுதிக்கும் போய்ச் சேர வேண்டிய டிஃபன் கேரியர்களை ஒன்றாகச் சேர்ந்து நீண்ட மரப்பலகைகளில் அடுக்குவார்கள். ஒவ்வொன்றிலும் 48 கேரியர்கள் வரை வைக்கலாம். ரயில் வந்ததும் எஞ்சினுக்கு அடுத்தபடியாக உள்ள ஒரு தனி கம்பார்ட்மென்டில் அவற்றை ஏற்றுவார்கள். முக்கிய ரயில் நிலையத்தை அடைந்ததும் டிபன் கேரியர்களை மீண்டும் பிரித்து அவை போய்ச் சேர வேண்டிய இடத்திற்குச் செல்லும் ரயிலில் ஏற்றுவார்கள். அந்த ரயில் நிலையத்தை அடைந்ததும் அவற்றை மீண்டும் பிரித்து சைக்கிளிலோ, தள்ளுவண்டியிலோ வைத்து வாடிக்கையாளரிடம் கொண்டு சேர்ப்பார்கள்.

இந்த முறையில் எடுத்துச் செல்வது சிறந்தது மட்டுமல்ல, செலவில்லாததும்கூட அதோடு, அந்த டப்பாவாலா போக்குவரத்து நெரிசலில் மாட்டிக்கொள்ள மாட்டார்; ஏனென்றால், அவர் சந்துபொந்துகள் வழியாகவோ வாகங்களுக்கு இடையே உள்ள குறுகிய இடைவெளிகளில் புகுந்தோ சென்று விடுவார். அதனால் 12.30 மணிக்கெல்லாம் அலுவலகத்திற்கு உணவு போய்ச் சேர்ந்துவிடும். பிறகு கடின உழைப்பாளியான அந்த டப்பாவாலா தன்னுடைய மதிய சாப்பாட்டை முடித்துவிட்டு மதியம் 1.15–லிருந்து 2.00 மணிக்குள் காலி டிஃபன் கேரியர்களை எல்லாம் திரட்ட ஆரம்பிப்பார். அதன் பிறகு, அவற்றை வாடிக்கையாளர்களின் வீடுகளில் கொண்டு சேர்ப்பார். வீட்டில் உள்ளவர் அதைக் கழுவி அடுத்த நாளுக்குத் தயாராக வைப்பார். காலையில் ஆரம்பித்து மாலை வரையாக இந்த மொத்த சேவையுமே இடைமாற்று ஓட்டப்பந்தயம் போல (relay race) விறுவிறுப்பாக சிறப்பாக நடக்கும்.

பாராட்டைப் பெற்றுத்தரும் எளிய சேவை :

டப்பாவாலாக்கள் எந்தளவு பேரும் புகழும் பெற்றிருக்கிறார்கள் என்பது மற்றவர்களுடைய கண்ணில்படாமல் போகவில்லை. அவர்கள் பின்பற்றுகிற முறையைப் பிற நிறுவனங்களும் அலசி ஆராய்ந்து பார்த்திருக்கின்றன. அவர்களிடமிருந்து கற்றுக்கொண்டதைத் தங்களுடைய தொழிலிலும் பின்பற்றுவதற்காக அப்படிச் செய்திருக்கின்றன. டப்பாவாலாக்களைப்பற்றிய குறும்படங்களும் எடுக்கப்பட்டிருக்கின்றன. அவர்கள் செய்கிற படு துல்லியமான சேவையைப் பாராட்டி ஃபோர்ப்ஸ் குளோபல் மேகஸின், அவர்களுக்குப் பாராட்டுச் சான்றிதழை வழங்கியுள்ளது. த கின்னஸ் புக் ஆஃப் உவர்ல்ட் ரெக்கார்ட்ஸில் அவர்கள் இடம் பெற்றிருக்கிறார்கள். அதோடு, அமெரிக்காவிலுள்ள ஹார்வார்ட் பிஸினஸ் ஸ்கூல் ஆய்வுகளிலும்

அவர்களைப் பற்றிய விவரங்கள் இடம்பெறுகின்றன. டப்பாவாலாக்களை முக்கியப் பிரமுகர்களும் சந்தித்திருக்கிறார்கள். அப்படிச் சந்தித்த இங்கிலாந்தின் இளவரசர் ஒருவர் அவர்களுடைய சேவையைப் பார்த்து அசந்தே போய்விட்டார். அதனால் அவர்களில் சிலரைத் தன்னுடைய கல்யாணத்தில் கலந்துகொள்ள இங்கிலாந்துக்கு அழைத்தார்.

இன்று டப்பாவாலாக்கள் ஆர்டர்கள் பிடிக்க கணக்கு வழக்குகள் பார்க்க கம்ப்யூட்டர்களையும் செல் ஃபோன்களையும் பயன்படுத்துகிறார்கள். ஆனால், அவர்கள் பின்பற்றுகிற முறை மட்டும் மாறவே இல்லை. மதிய சாப்பாட்டு வேளை நெருங்கினால் போதும், வயிற்றைக் கிள்ளும் பசியில் இருக்கிற மும்பை அலுவலகப் பணியாளர்கள் சுடச் சுட வீட்டுச் சாப்பாடு சரியான சமயத்தில் வந்து சேர்ந்துவிடும். என்று நம்பிக்கையோடு காத்திருக்கிறார்கள்!

(According to a recent survey, there is only one mistake in every 6,000,000 deliveries, Efficiency of the process have earned the dabba wallas a six-sigma rating from Forbes magazine. The Six-sigma rating means that they have a 99.99% efficiency in delivering the lunch-boxes to the right people) ஆறு மில்லியன் டப்பாவுக்கு ஒரு டப்பாதவறுதலாக சேர்க்கப்பட்டிருக்கும் அதனால்தான் போர்பஸ் இதழ் டப்பாவாலாக்களின் இத்திறமைக்கு அதிக மதிப்பெண்கள் 99.99% வழங்கியுள்ளது.

எங்க ஊரு டப்பா வாலா அருமை, அடடா அமெரிக்காவின் ஹைடெக் பார்க்கோட் அடையாள வாசிப்புகள் அனைத்துக்கும் ஒரு 'பெப்பே' காட்டிட்டு சிரிக்கும் போது முதல் முறையாக ரொம்பவும் பெருமையாக இருக்கிறது நான் ஓர் இந்தியன் என்பதில் அப்படி என்ன அமெரிக்க வல்லரசின் அறிவுத்திறமையும் அறிவியல் ஆற்றலும் செய்ய முடியாததை மும்பை டப்பாவாலாக்கள் செய்துவிட்டார்கள்? செய்து கொண்டிருக்கிறார்கள்? என்று உங்களில் பலர் நினைக்கக்கூடும். அண்மையில் அமெரிக்கன் ஏர்லைன்ஸில் பயணம் செய்த ஒருவரின் இரண்டு பெட்டிகள் அவர் இறங்கும் இடத்தில் வந்துச் சேரவில்லை. என்னடா என்று விசாரித்தால் கடந்த ஆண்டு மட்டும் 700 மில்லியன் பெட்டிகளில் 400 மில்லியன் பெட்டிகள் சரியான நபரிடம் உரிய நேரத்தில் சேர்ப்பிக்கப்படவில்லை! அமெரிக்க ஏர்லைன்ஸ் 400 மில்லியன் அமெரிக்க டாலர் தொகையை இந்த இழப்பிற்கான நஷ்ட ஈடாக பயணிகளுக்கு வழங்கியிருக்கிறது. இதற்கு சொல்லப்படும் காரணங்கள் எவ்வளவுதான் எந்திர உலகில் தவிர்க்க முடியாதவை என்று சமாதானம் செய்து கொண்டாலும் அமெரிக்காவின் RFID (Radio-FrequencyID) technology மும்பையின் டப்பாவாலாக்களின் 'அன்பட் குறியீடு' களுக்கு (படிப்பறிவில்லாதவன் – அன்பட்) ரொம்பவும் அற்புதமாக காட்சி தருகிறது.

எது எப்படியோ இப்போதெல்லாம் மும்பையில் பிளாட்பாரத்தில் இடித்துக் கொண்டு ஓடும் டப்பாவாலாவைப் பார்த்தால் கோபம் வருவதில்லை! பெருமையாக இருக்கிறது!!


# ஜெயஸ்ரீ திருமண தகவல் மையம்

**19/2, வள்ளலார் கோயில் சன்னதி தெரு, மயிலாடுதுறை. அலைபேசி : 94434 88125**

கார்குல பெரியோர்கள் தங்கள் வரன் பற்றிய விபரங்களை பதிவு செய்து ஏற்ற வரன்களை எங்கள் ஆலோசனையுடன் பெற்றுச் செல்லலாம். தாங்கள் ஜாதகம் கொடுத்தால் தங்கள் அனுமதியுடன் மட்டும் தரப்படும். நிர்வாக செலவிற்கு பதிவுக்கட்டணம் ரூ. 200/– மட்டும் பெறப்படும். திருமணம் முடிந்த பின் பதிவு நீக்கப்படும். பதிவு ஓர் ஆண்டிற்கு பிறகு புதுபிக்க வேண்டும். திருமணம் முடிந்த தகவல் தெரிவிக்க வேண்டும்.

**அலுவலக நேரம் :** மாலை 4.30 மணி முதல் 7.30 வரை ஞாயிறு விடுமுறை

நிறுவனர் **எஸ். ஜெயம்** வாழ்த்துக்களுடன் **எம். சத்தியபால்**

கடித தொடர்புமுகவரி : **எஸ். ஜெயம்,** 10, மயூரநாதர் மேல வீதி, மயிலாடுதுறை – 609 001.

## புதிய நாடு உருவாதல்
## FORMATION OF NEW COUNTRY

பாகிஸ்தானின் அரசியல் வரலாறு பற்றி எழுதி இருந்த கட்டுரைகளில் இரண்டு பகுதி பாகிஸ்தானின் ஒரு பகுதி தனியே பிரிந்து பங்களா தேஷ் உருவானதைப் பற்றி எழுதி இருந்தேன் அப்போதே ஒரு புதிய நாடு உருவாக வேண்டுமானால் என்னென்ன அம்சங்கள் இருக்க வேண்டும் என்பதைப் பற்றி எல்லாம் சற்று எழுத நினைத்தேன் அது கட்டுரையின் நீளத்தை அதிகப்படுத்தும் மற்றும் தலைப்பிலிருந்து மாறு பட்டு விடும் என்பதால் அப்போது எழுத வில்லை இப்போது அதனைப்பற்றிப் பார்ப்போம்.

### மாவட்டம் / மாநிலம் உருவாதல்

ஒரு மாநிலத்தில் உள்ள பகுதிகளில் புதிதாக ஒரு வட்டமோ மாவட்டமோ உருவாக வேண்டுமானால் அவ்வாறு புதிதாக உருவாக இருக்கும் வட்டம் / மாவட்டத்தின் வருவாயைக் கணக்கில் கொண்டு சம்பந்தப்பட்ட மாநிலம் உரிய நடவடிக்கை எடுக்கும் . அதே போல் ஒரு நாட்டில் புதிய மாநிலம் ஒன்று உருவாக வேண்டுமானால் அந்த நாடு நாட்டின் மத்திய அரசு நடவடிக்கை எடுக்கும். வட்டம் /மாவட்டம் பிரிவது / உருவாவது எல்லாம் அந்த நாட்டின் உள் நாட்டுப் பிரச்சினை அதே போல ஒரு புதிய நாடு உருவாக வேண்டுமானால் என்னென்ன அம்சங்கள் இருக்க வேண்டும் என்பதை இப்போது பார்க்கலாம் ஒரு புதிய நாடு உருவாவது என்பது அதன் பழைய நாட்டின் உள் நாட்டுப் பிரச்சினை ஆகாது

### புதிய நாடு எப்படி உருவாகும் ?

சாதாரணமாக ஒரு புதிய நாடு உருவாவது என்பது கீழ்க்கண்ட மூன்று வழிகளில் ஏதேனும் ஒன்றின் மூலம் தான் இருக்க முடியும்

1. உலகில் இதுவரையில் இல்லாத அங்கீகரிக்கப்படாத கடல் பகுதியிலோ அல்லது இதர நிலப் பகுதிகளிலோ புதிதாக கண்டு பிடிக்கப்படும் நாடு

2. பிரிட்டன் போன்ற காலனி ஆதிக்கத்தில் உள்ள நாடுகள் அந்த காலனியிலிருந்து விடுபட்டு சுதந்திரம் பெற்று புதிய நாடாக அவதரித்தல்

3. ஏற்கனவே இருக்கும் அங்கீகரிக்கப்பட்ட நாடுகளில் ஒரு பகுதி அந்த நாட்டி லிருந்து பிரிந்து தனி நாடாக உருவாதல்

ஒரு புதிய நாடு உருவாவது பற்றிய அதிகார பூர்வ அனைத்துலகச் சட்டம் / விதிகள் ஏதும் இல்லை ஆனால் அவ்வாறு புதிய நாடு உருவாக வழிகாட்டுதல்கள் உள்ளன.

### ஐ.நா சபையில் உள்ள நாடுகள்

1945 ஆம் ஆண்டு நிலவரப்படி உலகில் ஐக்கிய நாடுகள் சபையால் அங்கிகரிக் கப்பட்ட நாடுகளின் மொத்த எண்ணிக்கை 51 ஆகும் அது தற்போது 193 ஆக உயர்ந்துள்ளது ஐ.நா. சபையால் அங்கீகாரம் பெற்ற நாடுகள் 193 ஆக இருந்த போதிலும் உலகில் உள்ள மொத்த நாடுகளின் ஐ நா. சபையின் அங்கீகாரம் பெற்ற மற்றும் பெறாத நாடுகளின் எண்ணிக்கை பெரும்பாலான் நேரங்களில் தவறாகவே குறிப்பிடப்படுகிறது ஏனென்றால் அங்கீகாரம் பெற்ற இந்த 193 நாடுகள் அல்லாமல் மேலும் இரண்டு நாடுகள் ஒரு குறிப்பிட்ட அளவு அந்தஸ்துடன் இருக்கின்றன. அவையே வாடிகன் ஹோலி சீ என்னும் புனித கடல் என்று அதிகார பூர்வமாக அறியப்படட் நாடு என்னும் சுதந்திர நாடு மற்றும் பாலஸ்தீனம் ஒரு அரசாங்கம் போல் தோற்றம் அளிக்கும் நாடு ஆகியனவாகும் இந்த இரண்டு நாடுகளும் ஐ.நா. சபையின் நிரந்தர பார்வையாளர் அந்தஸ்தில் உள்ளன . இந்த இரண்டு நாடுகளும் ஐ. நா. சபையின் அனைத்து நடவடிக்கை களிலும் பங்கு பெறலாம் ஆனால் அவை ஐ நா.சபையின் உறுப்பினர் அல்ல ஆதலால் ஐ. நா. சபையின் பொதுப் பேரவையில் வாக்களிக்க உரிமை இல்லை

### பட்டியலில் இல்லாத நாடுகள்

மேலே சொல்லப்பட்ட இரண்டு நாடுகளைப் போல உலகில் வேறு சில நாடுகள் அல்லது நாட்டின் சில பகுதிகள் தாங்கள் சுதந்திர நாடு என அறிவித்திருப்பார்கள் அந்த நாடுகள் ஐ நா. சபையின் உறுப்பினர் ஆகாமல் இருந்தாலும் ஐ.நா. சபையின் பெரும்பாலான உறுப்பு நாடுகள் அந்த நாடு / பகுதிகளை அங்கீகாரம் பண்ணி இருப் பார்கள். செர்பியா நாட்டின் ஒரு பகுதியான கொசோவா என்ற நாடு 2008 ஆம் ஆண்டில் தான் ஒரு சுதந்திர நாடு என அறிவித்துக் கொண்டது அது ஒரு உதாரண மாகும் இவை தவிர கீழே சொல்லப்பட்ட மேலும் சில நாடுகள் உள்ளன.

தைவான் – ஐக்கிய நாடுகள் சபையைப் பொறுத்தவரை அதை மக்கள் சீனக் குடியரசு என்றே கருதுகிறது. குக் தீவு மற்றும் நியூ – இரண்டு மாநிலங்களும் நியூஜிலாந்து டன் தொடர்பு உடை யவை ஐ நா சபையுடன் தொடர்புடைய பல சிறப்பு முக வாண் மைகளுடன் இந்த இரண்டு மாநிலங்களும் ஒப்பந்தம் காணும் தகுதி உடையவை ஆனால் அந்த இரண்டு மாநிலங்களும் ஐ நா. சபையில் உறுப்பினர்களும் அல்ல பார்வையாளர் அந்தஸ்திலும் இல்லை ஐ நா.சபையால் அங்கீகரிக்கப்பட்ட நாடுகள் உள்ள இடங்கள்

ஆப்ரிக்கா – 54 நாடுகள் ஆசியா – 48 நாடுகள் ஐரோப்பா – 44 நாடுகள் லத்தீன் அமெரிக்கா மற்றும் காரிபீன் – 33 நாடுகள் ஓஷியானா – 14 நாடுகள் வட அமெரிக்கா – 2 நாடுகள்

**ஒரு நாடு எப்போது சுதந்திர நாடாக அங்கீகரிக்கப்படும் ?**

சட்டத்தில் தெளிவாக சொல்லப்படாவிட்டாலும் ஒரு நாடு அரசுரிமை/ இறை யாண்மை பெற்ற நாடாகக் கருதப்பட அந்த நாட்டிற்கு எல்லைகள் தேவை ஐ நா சபையில் ஒரு நாட்டின் சுதந்திரம் அங்கீகரிக்கப்பட அந்த நாட்டிற்கு எல்லைகள் மிக அவசியமாகும்

ஐ நா. சபை விதி களில் புதிய உறுப்பினர்களை அனுமதிக்கும்போது பின்பற்றப்பட வேண்டிய நடை முறைகளை தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருந்தாலும் அந்த விதிகள் ஏற்கனவே அரசுரிமை / இறையாண்மை பெற்றுள்ள புதிய உறுப்பினர்களுக்குத்தான் பொருந்தும்

அனைத்து நாடுகளாலும் அங்கீகரிக்கப்பட்ட இறையாணமை உள்ள நாடாக வருவது என்பது அவ்வளவு தெளிவான / எளிதான , நேரடியான நடை முறை அல்ல.மற்ற நாடு களின் அதிகாரம் அனைத்து நாடுகளின் அரசியல் சூழ் நிலை இவற்றை எல் லாம் பொறுத்து அமையும் ஆச்சரியப்படத் தக்க விதத்தில் பல ஆண்டு காலமாக பல நாடு களின் இறையாண்மை அங்கீகரிக்கப்படாமல் அங்கீகரிக்கப்படாத நாடுகளாக இருந்துள்ளன.

**எல்லையில் சிக்கல்**

இந்த எல்லைச் சிக்கல் என்பது மூன்றாவது முறையில் அதாவது ஏற்கனவே உள்ள நாட்டின் ஒரு பகுதி அதிலிருந்து பிரிந்து தனி நாடாகும்போது தனி நாடு ஆகும் போதுதான் வரும்.அவ்வாறு புதிய நாடு உருவாகும்போது ஏற்கனவே அது அங்கமாக இருந்த பழைய நாடு தனக்குச் சொந்தமாக இருந்த ஒரு பகுதியை இழப்பதுடன் அதனுடைய பழைய எலலை மாறச் செய்யும் அவ்வாறு எல்லை மாறும்போது அந்த நாட்டுக்கும் அதிலிருந்து பிரியும் புதிய நட்டுக்கும் இடையே எல்லைப் பியரச்சினை எழக் கூடும் அந்த சந்தர்ப்பத்தில் எல்லைப் பிரச்சினை பற்றிய சட்ட / விதி மீறல்கள் எழக் கூடும்

**நாடு உருவாக முக்கிய அம்சங்கள்**

ஏற்கனவே சொன்ன மாதிரி ஒரு புதிய நாட்டினை உருவாக்குவது நினைப்பது போல் செயல் படுத்துவது அவ்வளவு எளிதல்ல புதிதாக உருவாகும் நாடு சுதந்திர மான நாடு என்று அறிவிக்க ஆர்வம் இருக்கலாம் ஆனால் அவ்வாறு அறிவிக்க அனைத்து நாடுகள் சட்டங்களின் வழக்கப்படி சில குறைந்த பட்சத் தகுதிகள் / நடை முறைகள் நிர்ணயிக்கப் பட்டு உள்ளன. அவை வருமாறு

**முதல் படி – தகுதி உள்ளதை உறுதி செய்தல்**

**தகுதிகள் :–**

" உருவாகும் தனி நாடு வரையறுக்கப்பட்ட எல்லைகளைப் பெற்றிருக்க வேண்டும்.

" அந்த நாட்டுக்கு என நிரந்தரக் குடி மக்கள் இருக்க வேண்டும்

" அந்த நாட்டுக்கு என ஒரு அரசாங்கம் இருக்க வேண்டும்

" அந்த அரசாங்கம் இதர நாடுகளுடன் இணைந்து செயல்படும் தகுதி பெற்றிருக்க வேண்டும் இது ஒரு விவாதத்துக்கு உரிய அம்சம் தான் ஆனால் 1993 ஆம் ஆண்டில் நடந்த மாண்டே வீடியோ மாநாட்டில் இது ஒரு தகுதியாக சேர்க்கப்பட்டிருந்தது

**இரண்டாவது படி – சுதந்திரத்தைப் பிரகடனப் படுத்துதல்**

அடுத்த நிலையில் அவ்வாறு புதிதாக உருவான நாடு தான் ஒரு சுதந்திர நாடு என்பதை உலகுக்குப் பிரகடனப்படுத்த வேண்டும் முதல் படியில் சொல்லப்பட்ட நான்கு தகுதிகள் மற்றும் இரண்டாவது படியில் சொல்லப்பட்ட சுதந்திர நாடு என்று பிரகடனப் படுத்துதல் ஆகியவை புதிதாக உருவாகும் ஒரு நாட்டுக்குத் தேவையான அம்சங்கள் ஆகும் அதனால் இவ்வளவு அம்சங்களும் இருந்தால் அந்த நாடு மற்ற நாடுகளால் தானாகவே உடனடியாக அங்கீகரிக்கப்பட்டு விடும் என்று சொல் வதற்கில்லை ப்ரின்ஸ்பாலிடி ஆஃப் சி லேண்ட் என அழைக்கப்படும் 10,000 சதுர அடியில் கடலில் அமைக்கப்பட்டிருக்கும் உலகிலேயே மிகவும் சிறியய் நாடு என்று சொல்லிக் கொள்ளும் சீலேண்டு தான் ஒரு சுதந்திர நாடு என்று பிரகடனப் படுத்தியும் எந்த நாட்டாலும் அங்கீகரிக்கப்பட்ட தாகத் தெரியவில்லை

அவ்வாறு மற்ற நாடுகளால் அங்கீகரிக்கப் படாவிட்டாலும் ஒரு சுதந்திர நாடு எனப் பிரகடனப் படுத்திக் கொண்டால் வேறு சில நன்மைகள் ஏற்பட

வாய்ப்பு உண்டு என்று சொல்லப்படுகிறது உதாரணமாக செர்பியாவிலிருந்து பிரிந்து தனி சுதந்திர நாடாகப் பிரகடனப் படுத்திக் கொண்ட கொசோவா நாட்டை திரும்பவும் தன் நாட்டுடன் சேர செர்பியா நாடு எளிதாக அதனைத் தக்க முடியாது அவ்வாறு செய்வது ஐ ,நா. சபையின் விதிகளுக்குப் புறம்பானதாகும்

**மூன்றாவது படி -- அங்கீகாரம் பெறுதல்**

புதிதாக உருவான ஒரு நாட்டை அந்த நாட்டைச் சேர்ந்தவரே அது தன் நாடு என்று கூறிக் கொள்வதால் பயனில்லை. உலகில் உள்ள நாடுகளில் அந்த புதிய நாடும் ஒன்று என மற்ற நாடுகள் அங்கீகரிக்க வேண்டும் ஒரு நாட்டை மற்ற நாடுகள் அங்கீகரிப்பது என்பது அனைத்து நாட்டு சட்டங்கள் மற்றும் அனைத்து நாட்டு அரசியல் சம்பந்தப்பட்டதால் அது சற்று சிக்கலான விஷயமாகப் பார்க்கப்படுகிறது அது முழுக்க முழுக்க அரசியல் சம்பந்தப்பட்டது என்று கூறுவோரும் உண்டு அங்கீகாரம் பண்ணுவது என்பது ஒரு நாட்டின் உரிமை அல்ல விருப்புரிமை ஆகும்

அனைத்து நாடுகளின் அங்கீகாரம் என்பது அவ்வாறு அங்கீகரிக்கப்படும் நாட்டிற்கு அகில உலக அளவில் ஒரு சட்டபூர்வ தன்மையை அளிக்கிறது புதிதாக உருவான நாட்டை த் தனிப்பட்ட முறையில் ஒரு நாடோ அல்லது ஒரு சில நாடுகளோ அங்கீகரிப்பது என்பது அந்த நாடுகளுக்கும் புதிய நாட்டுக்கும் உள்ள உறவைப் பொறுத்தது அதனைப் பெறுவது எளிது ஆனால் அனைத்து நாடுகளும் குறிப்பாக ஐ. நா. சபையின் அங்கீகாரம் பெறுவதே சிறப்பான அம்சமாகும்

**நான்காவது படி – ஐ.நா. சபையில் சேருதல்**

1945 ல் துவக்கப்பட்டதிலிருந்து ஐக்கிய நாடுகள் சபையில் உறுப்பினராகச் சேரிவது என்பது உலக நாடுகளுக்கு ஒரு சட்ட பூர்வமான அங்கீகாரம் மற்றும் கௌரவப் பிரச்சினையாகவும் உள்ளது ஒரு நாடு ஐ.நா ஸ்பையில் உறுப்பினராகி விட்டால் அது அந்த நாட்டினை அங்கீகரித்ததற்கு ஒப்பாகும்

**ஐ. நா சபையின் அங்கீகாரம்**

ஐ.நா சபையின் நாடு/ அரசாங்கத்துறையின் கூற்றுப்படி ஒரு நாட்டினை அங்கீகாரம் செய்வதற்கு என்னென்ன தேவை என்பதற்கு எந்த வித அலுவலக ரீதியான கொள் கையும் கிடையாது மாறாக ஒரு நாட்டினை அங்கீகாரம் செய்யும் முடிவு ஐ நா. சபையின் தலைவரால் எடுக்கப்படுகிறது

ஒரு புதிய நாடு உருவாவது மற்றும் அது ஐ. நா. சபையில் உறுப்பினர் ஆவது ஆகியவற்றைப் பற்றி ஏதும் அறியாதவர்கள் ஓரளவு தெரிந்து கொள்வதற்காக எழுதப்பட்ட கட்டுரை. மேற்கொண்டு விபரம் வேண்டுவோர் ஐ.நா விதிகள் ஊாயசவநச மற்றும் வழக்கறிஞர் உதவியை நாடுவதே பயனுள்ளதாக இருக்கும்

சம்பந்தப்பட்ட விதிகள் மற்றும் கான்வர்சேஷன். காம், சி என் பி சி .காம், தாட்கோ.காம் வேர்ல்டோ மீடர்ஸ்.இன்ஃபொ மற்றும் ஃபாரின் பாலிசி.காம் போன்ற இணைய தளங்களிலிருந்து தொகுத்து வழங்கியவர் மேலையூர் ச.அன்பழகன், துரைப்பாக்கம், சென்னை 97

## வாழிய நீடு! வளர் தமிழ்நாடு!

மெய்யாத்தூர் சொ. வேல்முருகன்.
9578286891

நம் நாடு
தமிழ நாடென
நாளும் நீ புகழ் பாடு!

தென்னாடு
எங்கள் பொன்னாடென
தெம்மாங்கு இசைபாடு!

கொடியேறி
புலி விளையாட

குன்றேறிப்
புகழ் விளையாடும்!

நதியேறி
மீன் விளையாட

நாவினில்
நற்றமிழ் ஆடும்!

தென்னவன் நாடு
எங்கள் தீந்தமிழ்நாடு!

சிலம்போசை
நீதி உரைக்கும்!

கலம்பகங்கள்
காவியம் சொல்லும்!

'காப்பியனை' ஈன்ற நாடு
எங்கள் காவியத் தமிழ்நாடு !

வள்ளுவனை
உலகம் போற்ற

வளர்மதுரை
'சங்கம்' அமைக்க

தெள்ளு தமிழில்
சிறக்கும் நாடு!

திசை மணக்கும்
எல்லைக்கோடு!

நற்றவங்கள் புரிந்தோர்க்கு
நாயகன் சமைத்த வீடு!

குற்றமொன்றறியா
குலமாதர் நிறைந்த நாடு!

கோபுரமாய் உயர்ந்து நின்று
குன்றாது புகழ் ஒலிக்கும்!

ஆயிரமாய் காலம் வென்று
அன்னைத் தமிழ்மொழி காக்கும்!

தாய்த் திருநாடு!
எங்கள் தமிழ்த்திருநாடு!
வாழிய நீடு!
வளர் தமிழ்நாடு!

## "சிவபெருமான் முக்கண்களிலிருந்து சிந்திய கண்ணீர் துளிகளே உருத்திராட்க்ஷம்".

"சிதம்பரம் கிருஷ்ணமூர்த்தி"

குரு, லிங்கம், விபூதி, உருத்திராக்ஷம், சடாமுடி, பஞ்சாட்சரம், தீர்த்தம், இவ்வெட்டையும் மேலானதாகக் கடைப்பிடித்து சைவசமய விதிகளைப் பின்பற்றி வாழும் சைவ மக்கள் அணிவது உருத்திராட்க்ஷம்.

முப்பெரும் அசுரர்களின் மூர்க்கதனத்தால் விளைந்த கொடுமைகளைத் தேவர்கள் சொல்லக் கேட்ட சிவபெருமானின் மூன்று கண்களிலிருந்து வெளிப்பட்ட கண்ணீர் துளிகள் பூமியில் சிந்தி மரமாக முளைத்தன. அம்மரங்களே உருத்திராட்ச மரங்களாகும். அம்மரத்தில் விளைந்த விதைகளே உருத்திராட்ச மணிகளாகும். ருத்திரன் – சிவபெருமான் ஆகக்ஷம் – கண், சிவபெருமானின் கண்கள் = உருத்திராட்சமாகும்.

சிவபெருமானின் கண்ணீர் துளிகளிலிருந்து தோன்றியது ருத்திராட்ச விதைகளாகும். இந்த மரம் பூ பூக்கும் தாவர வகைகளைச் சார்ந்ததாகும். ஒவ்வொரு ஆண்டும் தை மாதம் பூ பூத்து காயாகி பழுத்திருக்கும் போது சிவப்பு நீல நிறத்தில் காட்சியளிக்கும். இம் மரம் (எலியோகாலனி) என்று கூறப்படும், இது தாவர குடும்பத்தை சார்ந்ததாகும். இம்மரத்தின் இலைகள் வாதா மரத்தின் இலைகள் போன்றிருக்கும். இம்மரம் காய்க்கும் உருத்திராட்ச பழங்களின் மேலே உள்ள ஒடு சற்று கடினமானதாக இருக்கும். ஓட்டின் உள்ளே உள்ள சதைப் பகுதியின் நடுவில் உருவாகும் விதைகள்தான் உருத்திராட்ச மணியாகும்.

உருத்திராட்ச மணிகள் விளைகின்ற மரங்கள் இந்தியா, நேப்பாளம், ஜாவா, சுமத்திரா, மலேசியா, ஆஸ்திரேலியா போன்ற இடங்களில் உள்ளன.

இந்தியாவில் மட்டும் 25 வகையான உருத்திராட்ச மரங்கள் உள்ளன. இவற்றுள் உயர்ந்த ரக மரங்கள் நேபாளம், ஜாவா, சுமத்திரா, அஸ்ஸாம், மத்திய பிரதேசம், மும்பை ஆகிய இடங்களில் வளர்கின்றன. இவற்றுள் நேபாளத்தில் காணப்படும் இனந்தான் முதன்மை தரம் வாய்ந்தது. இந்தோனேஷியாவில் வளரும் மரங்கள் தரும் மணிகளும் சிறப்புடையதாக கருதப்படும்.

உருத்திராட்சத்தில் மிகவும் பிரசித்தி பெற்றவை என்று கூறப்படுவது இருபத்தொரு வகைகள்தான். அந்த வகை மரங்கள் தரும் உருத்திராட்ச பழங்களுள் சதைப்பகுதியில் உருவாகும் விதைகளின் (உருத்திராட்ச கொட்டைகள்) மேல் பாகத்தில் ஆரம்பிக்கும் துளைகளை மைய்யமாக வைத்து கீழ் பாகத்தில் துளை முடியும் வகையில் அமைந்துள்ள உருத்திராட்ச விதையின் மேல் பாகத்தில் தொடங்கி நீளவாட்டில் வெட்டியது போன்ற கோடுகள் அல்லது சதை திரட்சி போன்ற கோடுகள் அமைந்திருக்கும் அக்கோடுகளைத் தான் முகங்கள் என்று கூறப்படும். ஒரு விதையில் எத்தனை கோடுகள் (ஆரஞ்சு பழத்தின் சுளைகள் சேர்ந்திருப்பது போல) என விதையில் அமைந்துள்ள கோடுகளை கணக்கிட்டு அத்தனை முகங்கள் கொண்ட உருத்திராட்ச மணி என்று கூறப்படும்.

ஒரு உருத்திராட்ச விதையில் ஒரு முககோடு முதல் பதினான்கு கோடுகள் வரை கொண்டதாக இருக்கும் என்று (ருத்ராட்ச ஜாபாலோ ஸ்ரீஷத்) நூல் கூறுகிறது.

ஒருமுக மணி : (சந்திர முகமணி) இது பிரம்ம சொரூபம் கொண்டது) இம்முக மணியை அணிந்து கொண்டால் நாம் செய்த பாவங்கள் நீங்கும், இத்துடன் **4** முகம், **6** முகம், கொண்ட மணியை சேர்த்து கட்டிக் கொண்டால் கல்வியில் வல்லவராவர்.

இருமுக மணி : (கௌரிசங்கர் மணியாகும் இம் மணியை அணிந்து கொண்டால் கொலை பாவம் நீங்கும்.

மும்முக மணி : அக்கினி தேவன் மணியாகும். அளவற்ற பலனைத்தரும் இருபாலரும் அணியலாம்.

நான்முக மணி : பிரம்ம தேவன் மணியாகும் இதை அணிந்து கொண்டால் நினைவாற்றல் பெருகும்.

ஐந்துமுக மணி : சதாசிவ சொரூப மணியாகும். இதை அணிபவர் சிவபெருமான் அருளைப் பெறலாம்.

ஆறுமுக மணி : ஆறுமுகக் கடவுளின் அருளை பெறலாம்.

ஏழுமுக மணி : காமதேவன், சப்தமாதர், மணியாகும் இதை அணிபவர்க்கு அகால மரணம் நீங்கும்.

எண்முக மணி : விநாயகர் மணியாகும். அதை அணிய அச்சமும் பாவமும் நீங்கும்.

ஒன்பதுமுக மணி : பைரவர் மணியாகும் இதை அணிய பைரவர் அருள் கிடைக்கும்.

பத்துமுக மணி : திருமால் மணியாகும். இதை அணிபவர்க்கு வைகுந்த பதவி கிடைக்கும்.

பதினொருமுக மணி : ருத்திரர்

மணியாகும். இதை அணிபவர் இரக்க குணமுடையவராவர்.

பன்னிருமுக மணி : மகாவிஷ்ணு மணியாகும். இதை அணிபவர் புகழை அடைவர்.

பதிமூன்றுமுக மணி : ப ர ம சி வ ன் மணியாகும். இதை அணிபவர் சகல சித்தியும் அடைவர்.

பதினான்குமுக மணி : அர்த்தநாரிமணி இதை அணிபவர் மோட்சம் அடைவர்.

மேலும் சில விசேடமுக மணிகளும் உண்டு. அவற்றை பூசை அறையில் வைத்து வழிபட வேண்டும்.

உருத்திராட்ச மணியை முனிவர்களும், பக்தர்களும் தம் குடுமியிலும், பூ நூலிலும், ஒரு உத்திராட்ச மணியை அணிவார்கள். தலையில் 22 உருத்திராட்ச மணி கொண்ட வட மாலையை அணிவார்கள்.

காதுகளில் – ஒவ்வொரு மணியும் அணிவர்.

கழுத்தில் : 32 உருத்திராட்ச மணி கோத்த வடமாலையும்

புயங்களில் : தனித்தனி 16 மணிகள் கோத்த மாலையும்

கைகளில் : தனித்தனியாக 12 மணிகள் கோத்த மாலையும்

மார்பில் : 108 மணி கோத்த வடமும் அணிய வேண்டும்.

பக்தர்கள்தினமும்உருத்திராட்சமணிஅணிந்து கொண்டு ஜெபம் செய்யும் முறையாவது, வடக்கு அல்லது வடகிழக்கு நோக்கி அமர மரப்பலகை இட்டு அதில் இருந்து உங்கள் குருநாதர் உங்கள் காதுகளில் சொல்லிய (சிவமேகுரு) என்ற மந்திரத்தை வலது கரத்தில் ஜெபமாலையை வைத்துக்கொண்டு அதை துணியால் மூடியபடி ஆயிரத்தெட்டு முறைச்சொல்ல வேண்டும்.

உருத்திராட்ச மாலையை, சிவபூசை செய்யும் போதும், உபன்னியாசம் கேட்கும் போதும், ஆலயம் செல்லும் போதும், சந்தியாவந்தனம், சிவதியானம், சிவபுராணம் படிக்கும் போதும், அணிந்திருக்க வேண்டும். உருத்திராட்ச மணியை உருட்டி ஜெபித்து முடித்தவுடன் விரல் நுனியை அருகில் உள்ள பஞ்ச பாத்திரத்தில் உள்ள நீரில் மூன்று முறை மூழ்கி எடுக்க வேண்டும் அந்த ஜலத்திற்கு சம்பூரண மந்திர ஜலம் என்று பெயர் அந்த ஜலத்தை தலையில் தெளித்து கொண்டால் நினைத்தது நிறைவேறும்.

காலையில் நாபிக்கு நேராகவும், நடுப்பகலில் மார்புக்கு நேராகவும், மாலை நேரத்தில் நாசிக்கு நேராகவும், ஜெபமாலையை பிடித்துக்கொண்டு மந்திரத்தை சொல்ல வேண்டும். உருத்திராட்ச மணியை உறங்கும்போதும், மலசலம் கழிக்க செல்லும் போதும் அணியக்கூடாது. இரவில் ஜெபமாலையை பூசையறையில் வைத்து காலையில் சாம்பிராணி காட்டி அணிந்து கொள்ள வேண்டும்.

| B 17/7 செல்வி **Dr. S. சத்திய பிரியா**<br>கேட்டை 3ம் பாதம்<br>களப்பாள<br>பூர்வீகம் : செந்துறை | 21.12.95<br>160 cm | B.D.S., | Pvt. Clinic,<br>Trichy | திரு. M. சச்சிதாநந்தம்,<br>மேலரத வீதி, நெய்வனம் தெற்கு,<br>செந்துறை (PO),<br>அரியலூர் (DT) – 621 714.<br>Cell : 99948 69441 (W),<br>94864 81712, 63833 93379 |
| B 18/7 செல்வி **R. அனுக்கிருபா**<br>மகம்<br>மருங்குட<br>பூர்வீகம் : ஆக்கூர்<br>விருப்பம் : சமபடிப்பு நல்ல வேலையில் உள்ள வரன் | 10.05.92<br>169 cm | B.Com.,<br>MBA., | TCS, Chennai | திரு. A. ராஜாராமன்,<br>7/4, கல்லூரி மேற்கு சாலை,<br>அரும்பாக்கம், சென்னை–600 106.<br>Cell : 97908 80266, 93809 97467<br>Phone : 044 – 2363 8205<br>E-mail : rajaramchennai2010@gmail.com |




SRI ANJANYAR THUNAI

GSTIN : 33AAKFC0941L1ZI
TAN No. : CMBC05827D

**C. CHITRA,** B.Sc., (M.D.)
**Cell : 93645 65546**

Office : **CS TEXTILE PROCESS**
NO. 208, PUTHUNAGAR 7TH STREET,
NALLUR, KANGEYAM ROAD,
TIRUPUR - 641 606.



Website : **www.cstextiles.in**
Email : **chitra@cstextiles.in**
Factory : **KVR Nagar, Mangalam Road (Unit - II)**
Our Buyers : **1. FILA (UK)**
**2. RELIANCE (INDIA)**
**3. ADIDAS (GERMANY)**
**4. TATA ZUDIO (INDIA)**

**"QUALITY IS OUR LIFE"**

| பெயர்<br>நட்சத்திரம் | வயது<br>உயரம் | படிப்பு | வேலை | முகவரி |
|---|---|---|---|---|
| G 1/7 செல்வன் **R. பாலாஜி**<br>அசுபதி<br>நன்னுடை<br>பூர்வீகம் : 6–கீழையூர் (தரங்கம்பாடி தாலுகா)<br>விருப்பம் : பட்டைய படிப்பு | 18.06.90<br>167 cm | B.E., MBA., | BOT VFX Pvt. Ltd.,<br>Chennai<br>Rs. 70,000/PM | திரு. A. ரவிச்சந்திரன்,<br>38, ஸ்ரீ லட்சுமி நகர்,<br>செம்பனார்கோவில்,<br>தரங்கம்பாடி தாலுகா<br>Cell : 94981 65037, 94866 65327 |
| G 2/7 செல்வன்<br>**Prabhakaran Sathiyamurthy**<br>Pooradam<br>Konguaraya<br>பூர்வீகம் : Malaiyur - Mayiladuthurai | 31.05.91 | B.E.,<br>(Mechanical) | Trumpf Metamation<br>Pvt. Ltd,<br>Siruseri, Chennai<br>Rs. 10 Lakhs/PA | திருமதி. SUSILA SATHIYAMURTHY<br>Plot No. 28, Door No. 11/196,<br>Annai Indra Gandhi Street, 1st Cross,<br>Bharathiyar Nagar,<br>Polichalur, Chennai - 600 074.<br>Cell : 98405 46301 |
| G 3/7 செல்வன் **K. இராமநாதன்**<br>மூலம்<br>வேளா<br>பூர்வீகம் : தாமரைப்பூண்டி | 25.01.98 | B.E.,<br>(Mechanical) | Renault Nissan<br>Automotive India<br>Pvt. Ltd. Oragadam<br>Rs. 20,000/PM | திரு. S. கோடிப்பிள்ளை,<br>5/2, மேலபெருமாள்கோவில் தெரு,<br>பெண்ணாடம்,<br>கடலூர் மாவட்டம் – 606 105.<br>Cell : 90475 97526 |
| G 4/7 செல்வன் **இரா. மணிபாரதி**<br>மகம்<br>தொழுவுட<br>பூர்வீகம் : பெண்ணாடம் | 04.03.96<br>168 cm | B.Sc. | MRF Ltd.,<br>Arakonam | திரு. தி. இராஜாமணி,<br>540, கண்ணப்பா தெரு,<br>நசரத்பேட்டை,<br>பூந்தமல்லி – 600 123.<br>Cell : 89399 91174, 98406 87849 |
| G 5/7 செல்வன் **கோ. சுந்தரக் கண்ணன்**<br>அவிட்டம்<br>கருவாழ<br>பூர்வீகம் : மயிலாடுதுறை<br>விருப்பம் : படித்த வேலையில் உள்ள or இல்லாத நல்ல குணமுள்ள வரன் | 03.08.93<br>175 cm | B.E. (Mech) | TCS, Chennai<br>Rs. 4.3 Lakhs /PA | திரு. A. கோவிந்தராஜன்,<br>1, வெங்கடேஸ்வரா நகர்,<br>மேற்கு தாம்பரம்,<br>சென்னை – 600 045.<br>Cell : 92823 42742, 98408 32995 |
| G 6/7 செல்வன் **D. ஸ்ரீசபரிராஜன்**<br>பூரம்<br>எரவுட<br>பூர்வீகம் : இறையூர்–பெண்ணாடம்<br>விருப்பம் : குடும்பபாங்கான சிங்கப்பூர் செல்ல விருப்பம் உள்ள பெண். | 22.05.91<br>173 cm | BE. (EEE), | Roatary,<br>Pvt. Singapore<br>Rs. 12 Lakhs /PA | திரு. A. தட்சிணாமூர்த்தி,<br>180/A, கொத்தட்டை ரோடு,<br>இறையூர் (PO) – 606 111.<br>பெண்ணாடம் RS, திட்டக்குடி (Tk).<br>Cell : 97879 74287, 99433 03570 |
| G 7/7 செல்வன் **இரா. அமுதன்**<br>ரேவதி<br>வேளா<br>பூர்வீகம் : பெண்ணாடம்<br>விருப்பம் : சமபடிப்பு, BE, ME, MCA, MBA<br>வேலைக்கு செல்வது பெண்ணின் விருப்பம் | 19.10.94<br>175 cm | BE. (MEch), | SAP Consultant<br>Danfoss Industries<br>Pvt. Ltd., Chennai<br>(MNC)<br>Rs. 9,50,000/PA | திருமதி. ராஜேஸ்வரி,<br>E1/40, வள்ளலார் தெரு,<br>பெண்ணாடம், திட்டக்குடி (Tk).<br>கடலூர் (Dt) – 606 105<br>Cell : 80126 82125, 94436 38924 |
| G 8/7 செல்வன் **அ. சரண்ராஜ்**<br>பூசம் 3ம் பாதம்<br>தொளாருடைய<br>பூர்வீகம் : நாகமங்கலம்<br>விருப்பம் : நல்ல குணமுள்ள வரன் | 05.09.91 | B.E<br>(Mechanical) | First Abudhabi<br>Bank<br>Rs. 21 Lakhs/PA | திரு. S. அன்பரசன்,<br>11B, பெரியார் நகர் 2வது தெரு,<br>அரியலூர் – 621 704<br>Cell : 97500 82213, 97502 79162,<br>98402 83867 |

| பெயர்<br>நட்சத்திரம் | வயது<br>உயரம் | படிப்பு | வேலை | முகவரி |
|---|---|---|---|---|
| **G 9/7** செல்வன் **V. நந்தகுமார்**<br>ரேவதி<br>மருங்குட<br>**பூர்வீகம் :** ஹரிஹரன் கூடல் (அரசலங்குடி)<br>**விருப்பம் :** சமபடிப்பு, பணியில் உள்ள வரன் | 12.02.97<br>177 cm | B.Tech. (M) | Ford Global<br>Technologies<br>Sholinganallur<br>Rs. 8.8 Lakhs/PA | திரு. B. விவேகாநந்தன்,<br>F2, ராம் சரோவர்,<br>No. 88, வீராத்தமன் கோவில் தெரு,<br>மேடவாக்கம், சென்னை<br>Cell : 99420 73694, 98420 86926 |
| **G 10/7** செல்வன் **S. ராஜேஷ்**<br>சதயம்<br>திரமுட<br>**பூர்வீகம் :** வல்லம் | 29.07.91 | DEEE, | வருவாய் துறை<br>அரசு நிரந்தர<br>பணி<br>Rs. 20,000/PM | திரு. S. செல்வராஜ்,<br>அக்ரஹாரம், மாமாகுடி,<br>தரங்கம்பாடி வட்டம் – 609 301.<br>Cell : 94888 09941, 94446 32687 |
| **G 11/7** செல்வன் **வே. சேதுமாதவன்**<br>திருவோணம்<br>சாத்துக்கூட<br>**பூர்வீகம் :** ஹரிஹரன்கூடல்–மயிலாடுதுறை<br>**விருப்பம் :** படித்த பணியில் உள்ள வரன். | 02.04.97 | B.E. (Mech) | Senior Engineer<br>Hyundai Mobis<br>Irungattukottai<br>Chennai<br>Rs. 7.25 Lakhs/PA | திருமதி. வே. லலிதா,<br>2/379, லஷ்மி நகர்,<br>பஜனை கோயில் தெரு,<br>வேப்பம்பட்டு,<br>திருவள்ளூர் – 602 024.<br>Cell : 81486 81120, 99403 83280<br>99402 39315 |
| **G 12/7** செல்வன் **M. அருண்குமார்**<br>கார்த்திகை 2ம் பாதம்<br>தென்னவராய<br>**பூர்வீகம் :** புதுக்குடி, ஏரவாஞ்சேரி அருகில்<br>**குறிப்பு :** ராகு, கேது தோஷம் உள்ள வரன்.<br>**விருப்பம் :** நல்ல குணமுள்ள<br>படித்த வரன் சமபடிப்பு சென்னையில் பணியில் உள்ள வரன் | 29.01.96<br>165 cm | M.Sc., BCA | GUPSHUP<br>Chennai<br>Rs. 9 Lakhs/PA | திரு. S. மதியழகன்,<br>3/781, தெருவீதியம்மன் கோவில் தெரு,<br>கெருகம்பாக்கம்,<br>சென்னை – 600 128.<br>Cell : 94446 31446,<br>90872 95484 (W) |
| **G 13/7** செல்வன் **S. தங்கவேல்**<br>பூரம்<br>குலத்துட<br>**பூர்வீகம் :** தில்லைவிடங்கான் சீர்காழி தாலுகா | 21.07.85<br>175 cm | DEE., BE | Lead Engineer,<br>FLMSI DTH Pvt.<br>Ltd. Chennai<br>Rs. 10 Lakhs /PA | திரு. T. சீனிவாசன்,<br>25, VSR நகர்,<br>சிதம்பரம் – 608 001.<br>Cell : 94430 42182 |
| **G 14/7** செல்வன் **S. பாபு**<br>மிருகசீரிடம்<br>நெப்புக்குட<br>**பூர்வீகம் :** திருபனந்தாள்<br>**விருப்பம் :** படித்த குடும்பபாங்கான பெண் | 30.08.94<br>172 cm | B.Tech (Civil) | Project Engineer<br>Land Tech AEPC<br>Pvt. Ltd., Chennai<br>Rs. 40000/PM | திரு. T. செல்வராஜ்,<br>9H/21, கணபதி தெரு,<br>மேற்கு மாம்பலம்,<br>சென்னை – 600 033.<br>Cell : 97500 79193 |
| **G 15/7** செல்வன் **Arul .G**<br>Kiruthigai<br>Koodaluda<br>**பூர்வீகம் :** Keezhadhangudi (Chidambaram)<br>**விருப்பம் :** Any Degree with a good job based in chennai. | 01.10.96<br>5' - 8" | B.Sc.,<br>(Visual<br>Communication) | Associate Creative<br>Director<br>TING Digital<br>Creative Agency<br>Chennai<br>Rs. 8 Lakhs/PA | திரு. S. Gnanasekaran,<br>19, First Floor, 4th Street,<br>Krishna Nagar, Virugambakkam,<br>Chennai - 600 092.<br>Cell : 89393 18184, 91761 97451 |
| **G 16/7** செல்வன் **S. பாலகுமரன்**<br>உத்திராடம்<br>காங்கேய<br>**பூர்வீகம் :** தீவளூர், திட்டக்குடி வட்டம்<br>**விருப்பம் :** சமபடிப்பு | 02.07.96<br>170 cm | B.E (CSE) | ஸ்ரீ லட்சுமி நகை<br>அடகு கடை<br>Car Finance<br>விருத்தாசலம்<br>Rs. 12 Lakhs/PA | திரு. கோ. செல்வமணி,<br>3A, மறைமலைஅடிகள் தெரு,<br>விருத்தாசலம் – 606 001.<br>Cell : 98426 52837,<br>96299 12901 (W) |

| பெயர்<br>நட்சத்திரம் | வயது<br>உயரம் | படிப்பு | வேலை | முகவரி |
|---|---|---|---|---|
| G 17/7 செல்வன் **B. தினேஷ்ராஜ்**<br>அஸ்வினி<br>வில்வராய<br>பூர்வீகம் : கருவாழக்கரை<br>விருப்பம் : பணிபுரியும் பெண்ணாக இருப்பது சிறந்தது (கட்டாயமில்லை) | 02.05.92<br>176 cm | B.E. (Mech) | Maintenance Engineer<br>Arni Infotech P. Ltd.,<br>Chennai<br>Rs. 4.30 Lakhs/PA | திரு. G. பாஸ்கரன்,<br>1/64, தெற்கு வெள்ளாழ தெரு,<br>கருவாழக்கரை (PO)<br>தரங்கம்பாடி (Tk)<br>மயிலாடுதுறை மாவட்டம்<br>Cell : 94437 03677, 63692 69113 |
| G 18/7 செல்வன் **பா. ஆனந்தன்**<br>மகம்<br>மழுவுட<br>பூர்வீகம் : துணிசிரமேடு<br>விருப்பம் : நல்ல குணமுள்ள வரன் | 10.05.92<br>170 cm | M.Sc., B.Ed.,<br>M.Phil.,<br>Ph.D.,<br>(Chemistry) | Asst Professor<br>(Guest Lecturer)<br>Govt. Arts College<br>Chidambaram<br>Rs. 35,000/PM | திரு. R. பாலசுப்ரமணியன்,<br>2/200, பிள்ளையார் தெரு,<br>துணிசிரமேடு,<br>சி.வீரசோழகன் அஞ்சல்<br>சிதம்பரம் – 608 602.<br>Cell : 63836 91893, 82206 63418 |
| G 19/7 செல்வன் **M. விஸ்வக்**<br>மிருகசீரிஷம் 3ம் பாதம்<br>இரவுட<br>பூர்வீகம் : துணிசிரமேடு<br>விருப்பம் : நல்ல குணமுள்ள வரன் | 16.05.91<br>173 cm | DME, BBA., | Sales Manager<br>ITC Ltd.,<br>Chidambaram<br>Rs. 30,000/PM | திரு. வை. முருகானந்தம் பிள்ளை,<br>3/184, சிவன் கோவில் தெரு,<br>துணிசிரமேடு,C.வீரசோழகன் Post,<br>சிதம்பரம் மாவட்டம் – 608 602.<br>Cell : 97156 38810, 97156 38811 |
| G 20/7 செல்வன் **ப. ஸ்ரீராம்**<br>ஆயில்யம்<br>சாத்தனுட<br>பூர்வீகம் : வயலூர், குன்னம், பெரம்பலூர் மாவட்டம்<br>விருப்பம் : தகுந்த வரன் | 28.10.94<br>165 cm | B.E. (CSC) | IT Analyst<br>TCS, Chennai<br>Rs. 40,000/PM | திருமதி. P. உமா,<br>5-A/84C, ரோஸ் நகர்,<br>பெரம்பலூர் – 612 212.<br>Cell : 97874 84028,<br>97505 29615 (W) |
| G 21/7 செல்வன் **ச. முகுந்தன்**<br>மகம்<br>திட்டத்துட<br>பூர்வீகம் : விருத்தாசலம்<br>விருப்பம் : சமபடிப்பு (அ) பட்டதாரி பெண் | 17.04.97<br>183 cm | B.E. (Mech) | CADD Engineer<br>Whirool India Ltd.<br>Pondy | திருமதி. சி. இன்பசரஸ்வதி,<br>Plot No. 152, ஆனந்தம் தெரு,<br>அருணாச்சலம் நகர்,<br>விருத்தாசலம் – 606 001.<br>Cell : 94430 87504, 80127 64841 |
| G 22/7 செல்வன் **பா. சந்தோஷ்குமார்**<br>திருவாதிரை<br>மருங்குட<br>பூர்வீகம் : பூதனூர், தரங்கம்பாடி (Tk) | 22.11.94<br>174 cm | B.Tech.<br>(Mech) | Managing Director<br>Jayaveera Enterprises<br>Guindy, Chennai<br>Rs. 12 Lakhs/PA | திரு. பாண்டியன்,<br>20, ஜீவா நகர் விரிவு,<br>பள்ளிக்கரணை,<br>சென்னை – 600 100.<br>Cell : 98402 43591 |
| G 23/7 செல்வன் **S. Mohanasundaram**<br>Ayilyam<br>Aalachukuda<br>பூர்வீகம் : Meyyathur | 05.12.93<br>155 cm | D.M.E. | QC, TPI Composites<br>India Pvt. Ltd.,<br>Chennai<br>Rs. 4,05,000/PA | திரு. K. Sabanayagam,<br>49, Arivalayam Nagar,<br>M.K. Thottam,<br>Chidambaram - 608 001.<br>Cell : 82203 30706 |
| G 24/7 செல்வன் **இரா. அருண்குமார்**<br>மூலம் 3ம் பாதம்<br>மருகுட<br>பூர்வீகம் : சிதம்பரம்<br>விருப்பம் : பணியில் உள்ள வரன் | 21.03.98<br>158 cm | B.E. (ECE)<br>MBA., | Senior Analyst<br>Chennai<br>Rs. 7,60,000/PA | திரு. இராஜசேகர் ,<br>128, V.S.R. நகர்,<br>சிதம்பரம் – 608 001.<br>Cell : 94889 51769 |
| G 25/7 செல்வன் **S. விக்னேஷ்**<br>பரணி<br>பங்களதரிய<br>பூர்வீகம் : கீழ்நத்தம், சிதம்பரம்<br>விருப்பம் : படித்த வேலையில் உள்ள வரன். | 23.06.95<br>5' - 7" | M.Sc.,<br>(CS) | System Administrator<br>NLGIC Support Service Pvt. Ltd.,<br>Nungambakkam<br>Rs. 35,000/PM | திரு. S. சுந்தரம்,<br>பிளாட் எண். 34, வேலன் நகர்,<br>கண்ணங்குடி மெயின் ரோடு,<br>சிதம்பரம் – 608 001.<br>Cell : 99428 57747 / 73055 81424<br>E-mail:sundaramnirmala.90@gmail.com |

# சங்க நிகழ்வுகள்

**சங்கச் செய்திகள் அனுப்புவோர் கவனத்திற்கு**

100க்கும் மேற்பட்ட சங்கங்கள் செயல்படுவதை நாம் அறிவோம். அனைத்து சங்கங்களும் ஒவ்வொரு மாதமும் சங்கச் செய்திகள் அனுப்புவதில்லை என்றாலும் அனுப்பப்படும் சங்கச் செய்திகள் அனைத்தையும் வெளியிட முயற்சிக்கிறோம். அதற்கு உதவிகரமாக சங்கச் செய்திகள் அனுப்புபவர்கள் தாங்கள் அனுப்பும் செய்திகளை சுருக்கமாகவும், முக்கிய தீர்மானங்களையும் மட்டும் அனுப்பி அதிகமான சங்கங்களுக்கு வாய்ப்பளிக்க உதவுமாறு கேட்டுக்கொள்கிறோம். நிர்வாகத் தேவை காரணமாக அனுப்பப்படும் செய்திகளை நிராகரிக்கவோ சுருக்கித் தொகுக்கவோ ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு.

## நங்கநல்லூர் :

சங்கத்தின் செயற்குழு கூட்டம் 18–6–2023 அன்று தலைவர் இல்லத்தில் தலைவரது வரவேற்புடன் துவங்கியது.

சங்க உறுப்பினர் சென்னை புழுதிவாக்கம் திரு. V. மருதவாணன் மற்றும் திரு. கணேஷ்குமார் (கிழாய்) இவர்களது நெருங்கிய உறவினர் திரு. S. கலியபெருமாள், MTC (ஓய்வு) வயது 79 அவர்கள் சென்னையில் இயற்கை எய்தியதற்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

சங்கத்தின் சென்ற மாதத்திய கூட்ட அறிக்கை சங்க செயலாளரால் வாசிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. 28–05–2023 முதல் இன்று வரை உள்ள காலத்தில் நடைபெற்ற சங்கத்தின் பிற நிகழ்வுகளும் செயலாளரால் விவரிக்கப்பட்டது.

எதிர் வருகிற ஆகஸ்ட் மாதம் 26, 27, 28 தேதிகளில் சங்கம் ஏற்பாடு செய்துள்ள கொங்கு மண்டல சுற்றுலா குறித்து விவரிக்கப்பட்டது. கார்குல சொந்தங்கள் ஆர்வமுடன் தங்களது பெயரினை முன்பதிவு செய்து தங்களது மகிழ்ச்சியை தெரிவித்துக்கொண்டனர். சுற்றுலா சிறக்க வாழ்த்து தெரிவிக்கப்பட்டது.

30–7–2023 அன்று நடைபெற இருக்கும் திருச்சி சங்கத்தின் 50–வது ஆண்டு பொன்விழாவிற்கும், 13–8–2023 அன்று புதுச்சேரியில் நடைபெற இருக்கும் கார்காத்தார் ஒப்புரவு எழுச்சி விழாவிற்கும் சங்கத்தின் சார்பில் பெருமளவில் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

சங்கத்தின் ஆற்றல்மிகு செயலாளர் திரு. கோ. தியாகராஜன் அவர்களது சமூக மற்றும் சமுதாய சேவையினை பாராட்டுகின்ற வகையில் அன்னாருக்கு சந்தனமாலை அணிவித்து சேவை தொடர வாழ்த்து தெரிவிக்கப்பட்டது.

சங்க செயற்குழு உறுப்பினர் திரு. S. சம்பத்குமார் நன்றி நவில கூட்டம் இனிது நிறைவடைந்தது.

G. சரவணன், தலைவர்.

## அண்ணாநகர்

சங்க கூட்டம் 11–6–2023 ஞாயிறன்று நடைபெற்றது.

ஒடிசா ரயில் விபத்தில் இறந்தவர்களுக்கு ஒரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தி இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

புதிதாக இணைந்த பெரம்பூர் திரு. முத்துக்குமார் அவரது மனைவி திருமதி. வானதி, சென்னை மாநகராட்சி பள்ளி ஆசிரியை அவர்களையும் வரவேற்று சுய அறிமுகம் நடைபெற்றது. எழும்பூரில் இருந்து திரு. சண்முகம் அவர்கள் வந்திருந்து கூட்டத்தில் கலந்து கொண்டு அவரது மகள் திருமதி. சசிகலா சென்னை காவல் துறையில் இன்ஸ்பெக்டராக பதவி உயர்வு பெற்றதை தெரிவித்து மகிழ்ந்தார்.

இந்த வருடம் ஆண்டு விழா மலர், மாதாந்திர காலண்டர் வெளியிட முடிவு செய்யப்பட்டது. விளம்பர கட்டணம் ஒப்புரவு இதழில் வசூலிக்கும் தொகையை வாங்கலாம் எனவும் முடிவு செய்யப்பட்டது. ஆண்டு விழா மலருக்கு செய்திகள் அனுப்பவும் கதை கட்டுரை கவிதை மருத்துவ குறிப்புகள் மருத்துவ ஆலோசனைகள் போன்றவற்றை செப்டம்பர் 10–ம் தேதிக்குள் அனுப்ப உறுப்பினர்களுக்கு கடிதம் எழுதவும் முடிவு செய்யப்பட்டது.

திருச்சி கார்காத்தார் சங்கத்தின் பொன்விழா ஆண்டு மலருக்கு கலரில் முழுப்பக்க விளம்பரம் கொடுக்க முடிவு செய்யப்பட்டது. அதற்குண்டான தொகையை ஆலோசகர் திரு. கு. விவேகானந்தன் அவர்கள் கொடுத்துவிடுவதாக தெரிவித்தார்கள்.

நிறைவாக திரு. இளங்கோ வாசுதேவன் நன்றியுரை சொல்ல கூட்டம் நிறைவு பெற்றது.

கொடுங்கையூர் பகுதி கூட்டம் திரு. கோபாலகிருஷ்ணன் தலைவர் அவர்களின் முன்னிலையில் 18–6–23 அன்று மாலை நடைபெற்றது. அதில் சி.எம்.டி.ஏ. திரு. சிவகுமார் அவர்களின் தந்தை கே.எஸ். இராமசாமி அவர்களின் மறைவிற்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

அடுத்து தந்தையர் தினத்தை கொண்டாடும் விதமாக பிள்ளைகள் எல்லோரும் கேக் வெட்டி கூட்டத்திற்கு வந்திருந்த தந்தையர் குலத்தை வாழ்த்தி மகிழ்ந்தார்கள். நிறைவாக திரு. பிரபாகரன் நன்றி சொல்ல கூட்டம் முடிவு பெற்றது.

– என். ஆனந்தகணபதி, செயலர்.

9094682811

## குரோம்பேட்டை :

சங்க செயற்குழு கூட்டம் 18–06–2023 அன்று பிரவின் பிளாட்ஸ், காந்தி தெரு, சிட்லபாக்கத்தில் சங்க தலைவர் திரு. சி. மனோகர் தலைமையில் நடைபெற்றது. சிறப்பு ஆலோசகர் திரு. சபா. சிவகுமார் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் 11 பேர் கலந்து கொண்டனர்.

**நிறைவேற்ற பட்ட தீர்மானங்கள் :**

பொருளாளர் வசந்தகுமார் நிதிநிலை அறிக்கை வாசித்தார். அக்டோபர் 2023 முதல் வாரத்தில் மங்கல சந்திப்பு நடத்தவும், திரு. சத்தியமூர்த்தியை மங்கல சந்திப்பு அமைப்பாளராக நியமிக்கவும், அதற்கான நிர்வாக மற்றும் ஆலோசனை குழுக்களை தலைவர் அமைக்க கேட்டுகவும், மங்கல சந்திப்பு விளம்பரம் மற்றும் படிவங்களை கார்காத்தார் ஒப்புரவில் பதிப்பிக்கவும், குரோம்பேட்டை கார்காத்தார் சங்க இணையத்தளம், மொபைல் செயலி ஆகியவற்றை மேம்படுத்த செயலாளர் திரு. தியாகராஜனிடம் கேட்டுக்கொள்ளவும், கல்வி அறக்கட்டளைகள் மூலம் தகுதியான கார்குல மாணவர்கள் கல்வி உதவிதொகை பெற உதவி வரும் திரு. முருகேஷ் தலைமையிலான குழுவுக்கு பாராட்டு தெரிவித்தும், ஒரு நாள் சுற்றுலாவுக்கான திட்டங்கள் மற்றும் ஏற்பாடுகள் முன்னேற்றங்கள் பற்றிய ஆய்வு செய்யவும் தீர்மானிக்கப்பட்டது.

பா. தியாகராஜன்,
செயலாளர்.

## போரூர் :

18–6–23 அன்று சங்க செயற்குழு கூட்டம் கௌரவ ஆலோசகர் திரு. இளங்கோ இல்லத்தில் நடைபெற்றது. சங்கத்தலைவர் திரு. இராமலிங்கம் வரவேற்புரை ஆற்ற சங்கச் செயலாளர் திரு. சந்திரமோகன் நிகழ்ச்சியினை தொகுத்து வழங்க, சங்கப் பொருளாளர் திரு. பரமசிவம் அவர்கள் வரவு செலவு அறிக்கை சமர்ப்பிக்க திரு. பரமசிவம் அவர்கள் நன்றியுரை வழங்கியதுடன், இனிய மாலை விருந்தளித்த திரு. இளங்கோ குடும்பத்தினருக்கு நன்றியையும் கூற கூட்டம் இனிதே நிறைவுற்றது.

**கூட்டத்தில் எடுக்கப்பட்ட பின்வரும் தீர்மானங்கள் :**

நமது சங்க எட்டாவது ஆண்டு விழா 24–9–23 ஞாயிற்றுக்கிழமை மதியம் நடத்துவது எனவும்,

சிறுவர்கள் விளையாட்டுப் போட்டி மகளிர் போட்டி, நமது போரூர் சங்க பகுதியிலுள்ள மருத்துவர்களை கௌரவித்தல், LUCKY DRAW COOPON நடத்துவது எனவும்,

போரூர் சங்க உறுப்பினர்களின் 10வா, +2 படித்த அனைத்து மாணவ, மாணவிகளுக்கு சிறப்பு பரிசு வழங்குவது என முடிவு செய்யப்பட்டது. மாணவ, மாணவிகள் தங்களது மதிப்பெண் சான்றை கீழ்கண்ட Whats app நம்பருக்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஆண்டு விழாவில் வேறு Other Activities அதாவது இசை, நடனம், பரதநாட்டியம் போன்றவைகளில் ஆர்வம், கலந்து கொள்ள விரும்புபவர்கள் முன்னரே தெரியபடுத்தவும்.

சிவகாசியை சேர்ந்த நமது குல இளைஞர் மருத்துவச் செலவுக்கு போரூர் சங்க உறுப்பினர்களின் மூலம் ரூபாய் 25000 காசோலையாகவும், ரூபாய் 2200/– நேரிடையாகவும் வழங்கப்பட்டது. இளைஞர் முழு குணமடைந்து சௌகரியமாக உள்ளார் என்பதையும் தெரியபடுத்துகிறோம்.

புதிய உறுப்பினர்கள் சேர்க்கை நடைபெற அனைவரும் முயற்சி செய்ய கேட்டுக்கொள்கிறோம்.

தொடர்புக்கு : Whats App No: 9444422813, 9444349940

S. சந்திரமோகன்,
செயலாளர்.

## கடலூர் :

மாதாந்திரக்கூட்டம் சங்கக் கட்டிடத்தில் மாலை 4.30 மணி அளவில் சங்கத்தின் கௌரவத் தலைவர் தலைமையில் நடைபெற்றது. சங்கத்தின் செயலாளர் அனைவரையும் வரவேற்றார். தலைவர் சங்க செயல்பாடுகள் குறித்து விளக்கினார். கடந்த ஏப்ரல் மே மாதங்களில் சங்கக்கட்டிடத்திற்கு வண்ணப்பூச்சு செய்யப்பட்டது. பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

சங்கப் பயன்பாட்டிற்காக புதிய நாற்காலிகள் வாங்கிட முடிவு செய்யப்பட்டது. 2023–ஆம்

ஆண்டிற்கான உறுப்பினர் சந்தாவினை ஜூன், ஜூலை மாதங்களில் உறுப்பினர்களிடம் பெறுவதென முடிவு செய்யப்பட்டது. சென்னை இராதா இஞ்சினியரிங் ஒர்க்ஸ் அறக்கட்டளையிலிருந்து 2023–24–ஆம் ஆண்டிற்கான கல்வி உதவித்தொகை பட்டப்படிப்பு, பட்டயப்படிப்புகளில் 2, 3, மற்றும் 4–ஆம் ஆண்டு படிப்பிற்கான கல்வி உதவித்தொகை பெற விண்ணப்பதாரர்கள் நேரடியாக அறகட்டளைக்கு விண்ணப்பங்களை அனுப்பி பெற்றுக் கொள்ளலாம் என அறக்கட்டளை நிர்வாகம் அறிவித்துள்ளது. அதை பின்பற்றிட கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியர் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

முதலாம் ஆண்டு பட்டப்படிப்பிற்கும், பட்டயக் கல்வியிலும் சேருபவர்கள் சங்கத்தின் மூலம் கல்வி உதவித்தொகை பெற விண்ணப்பங்களை உரிய கிளைச் சங்கங்களின் பொறுப்பாளர்கள் கையொப்பங்கள் பெற்று விண்ணப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

சங்கத்தின் சேமிப்புத் திட்டங்களில் பங்கு பெறும் உறுப்பினர்கட்கு ஆண்டு விழாவில் ஊக்கப்பரிசு வழங்கிட முடிவு செய்யப்பட்டது. 125 – புதிய பிளாஸ்டிக் இருக்கைகள் சங்கத்தின் மகளிர் அணியினர் வழங்கிட இருப்பதால் மகளிரணி நிர்வாகிகட்கும், உறுப்பினர்கட்கும் நன்றியும், பாராட்டுதல்களும் தெரிவிக்கப்பட்டன.

சங்கக் கட்டிடத்தில் ஜனவரி 2023 முதல் ஒவ்வொரு 3–வது ஞாயிற்றுக்கிழமை, தருமபுரம் ஆதினத்தின் சார்பில் சாலை 8.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை "சைவ சிந்தாந்த சிரேன்மணி பட்டப்படிப்பு விடுப்புகள் நடைபெற்று வருகிறது. இப்படிப்பில் சுமார் 40 பேர் கலந்து கொண்டு பயின்று வருகின்றனர். இவர்கட்கு மதிய உணவு பங்களிப்பாளர்களும் வழங்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு மாதமும் ஒருவர் வீதம் உணவளிக்கப்படுகிறது.

மேலும் "திருவாசக முற்றோதலும்" சங்கக்கட்டிடத்தில் மகளிரணி சார்பில் மாதந்தோறும் நடைபெற்று வருகிறது. முற்றோதல் நடத்தும் திரு. தங்கசிவப்பிரகாசம் சுவாமி அவர்களுக்கு நன்றியும் பாராட்டுதல்களும் தெரிவிக்கப்பட்டன.

சங்கத்தின் சார்பில் மாலை சிற்றுண்டி வழங்கப்பட்டு வருகிறது. அதை கண்ணுரும் திருமதி. ஹேமலதா அவர்கட்கு பாராட்டுக்கள். துணைச்செயலர் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவுற்றது.

– T. விவேகானந்தன், தலைவர்.

## காட்டுமன்னார்கோயில் ஒன்றியம்:

18–06–2023 அன்று ஒன்றிய கார்காத்தார் சங்க செயற்குழுக்கூட்டம், செயலர் திரு. V.R. ஞானம் இல்லத்தில் நடைபெற்றது. தலைவர் திரு. R. பத்மநாபன் பிள்ளை தலைமை வகித்தார். மாநிலத் துணைத்தலைவர் திரு. சிவராஜன் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

20–06–2023–ல் 78–ஆம் பிறந்த நாள் காணும் கார்குல வள்ளல் திரு. R. வெங்கடேசம் பிள்ளை அவர்கள் நீடுழி வாழ்ந்து நம் இனமக்களுக்கு மேலும் பேருதவிகள் புரிய இறைவனை வேண்டி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

கூடுவெளி சாவடியில் உள்ள அரசு தொழில்நுட்பக் கல்லூரிக்கு 47.65 ஏக்கர் நிலம் நன்கொடையாக வழங்கிய நாஞ்சலூர் தெய்வத்திரு. முத்துக்குமரன் பிள்ளை அவர்களின் முழு உருவ புகைப்படத்தினை கல்லூரியில் வைக்க அரசுக்கு கோரிக்கை வைக்கத் தீர்மானிக்கப்பட்டது.

செயலர் அவர்களின் சிற்றுண்டிக்குப்பின் சுமார் 7.30 மணி அளவில் கூட்டம் இனிதே நிறைவுற்றது.

– V.R. ஞானம், செயலர்.

Cell: 9444876164

## குமராட்சி ஒன்றியம் :

20–6–2023 அன்று குமராட்சி ஒன்றிய அவசர செயற்குழு கூட்டம் குமராட்சி ஒன்றிய தலைவர் இல்லத்தில் நடைபெற்றது. சங்க செயலாளர் திரு. R. முத்துக்குமரன் பிள்ளை கடந்த 18–06–2023 அன்று மாரடைப்பால் அகால மரணமடைந்தார்கள். அவரது சேவைகளை பாராட்டி தலைவர் A.G. சிவராமன் பிள்ளை மற்றும் பொருளாளர் திருமதி. திலகம் கொண்டு வந்த இரங்கல் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

நமது செயலாளர் R. முத்துக்குமரன் பிள்ளை நமது சங்கம் துவங்கிய காலத்திலிருந்து இளைஞர் அணியில் பணிபுரிந்து, பின் நமது சங்க அனைத்து செயல்பாடுகளிலும், விழாக்களிலும் ஈடுபட்டு சிறப்புடன் நடத்தியவரும், மேலும் நமது சங்கத்தின் செயலாளராக சங்க கட்டிடம் வாங்கியது மற்றும் அதன் சீரமைப்பு உள்ளிட்ட அனைத்து பணிகளிலும் ஆலோசனை வழங்கியும் சிறப்புடன் செயல்பட்டும் வந்ததை சங்க உறுப்பினர்கள் அனைவரும் நினைவு கூர்ந்தார்கள்.

அன்னாரது இழப்பு சங்கத்தின் பேரிழப்பாகும். அன்னாரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கு சங்கம் ஆழ்ந்த வருத்தத்தை தெரிவித்துக்கொள்கிறது.

G. சிவராமன், தலைவர். 9787068062

## விக்கிரமங்கலம் மகளிரணி :

கௌரவத்தலைவர் திரு. பரிமளா பாலசுப்ரமணியன் இல்லத்தில் 11–6–23 அன்று கூட்டம் நடைபெற்றது. இரா. இளஞ்சியம் ஆச்சி தலைமையில், மு. கண்ணம்மாள் முன்னிலையில் சு. வளர்மதி B. சரோஜா குத்துவிளக்கேற்றி இல்லக விளக்கது என்ற பாடல் பாட துவங்கியது.

இரா. பானுமதி வரவேற்புரையாற்றினார்.

பொய்யாயின எல்லாம் போய் அகல என்ற தலைப்பில் பொய் பேச கூடாது என்றும், சரியான நேரத்தை கடைபிடிக்க வேண்டும். (பஞ்சுவாலிட்டி) என்ற இரண்டு தலைப்பில் பேசப்பட்டது. 20 (இருபது) உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். கஸ்தூரி அம்சவள்ளி சிறுதானிய உணவு குளிர்பானம் வழங்கி சிறப்பித்தனர். ஒப்புரவு இதழ் தொடர்ந்து படிக்க வேண்டும் என்று கலந்துரையாடினார்கள். கூட்டத்தில் பரிசு குலுக்கல் நடைபெற்றது. முதல் பரிசு கு. சுலோசனா, இரண்டாவது பரிசு தி. இளவரசி, மூன்றாவது பரிசு. ச. ஆனந்தி நூல்கள் வழங்கப்பட்டது (புத்தகம்) மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் என்ற வாழ்த்து பாட்டுடன், நன்றியுரை பு. ஜெயந்தி கூறி மாலை 5 மணிக்கு கூட்டம் முடிவுற்றது.

செயலாளர்.

## சீர்காழி:

சங்க செயற்குழு கூட்டம் 10–6–23 அன்று சங்க கட்டிடத்தில் தலைவர் திரு. சுகுந்தவனநாதன் பிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் இந்த ஆண்டிற்கான கல்வி உதவிதொகை வழங்குவது தொடர்பாக விவாதித்து ஜூலை 30–ந் தேதிக்குள் பூர்த்தி செய்த விண்ணபங்கள் வந்து சேர வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டது. மற்றும் 20–வது மங்கள சந்திப்பு மற்றும் 20–ம் ஆண்டு விழா சிறப்பாக நடைபெற்றதற்க்கும் ஒத்துழைப்பு கொடுத்த அனைத்து உறுப்பினர்களுக்கும் பாராட்டு கூறப்பட்டது. சங்க செயற்குழு கூட்டம் பொருளாளர் திரு. C. அகோரம் பிள்ளை அவர்கள் நன்றி கூற இனிதே நிறைவு பெற்றது.

கல். சுகுந்தவனநாதன் பிள்ளை,

தலைவர்.

## மயிலாடுதுறை :

செயற்குழு கூட்டம் 04–06–23 அன்று சங்கக் கட்டிடத்தில் தலைவர் திரு. சு. அன்பழகன் தலைமையில் இனிதே தொடங்கியது. திரு. G. முருகையன் இறைவணக்கம் பாடினார். சென்ற மாதக்கூட்ட அறிக்கை மற்றும் வரவு–செலவு விவரங்களை செயலர் திரு. A. இராஜேந்திரன் வழங்கினார்.

மங்கல சந்திப்பின் முழுப் பொறுப்பையும் திரு. T. பன்னீர்செல்வத்திடம் ஒப்படைப்பது எனத் தீர்மானிக்கப்பட்டது. கல்வி உதவித்தொகை படிவங்கள் விரைந்து வழங்க அறிவுறுத்தப்பட்டது. சங்க வளர்ச்சி தொடர்பாக திருவாளர்கள் M. சத்தியபால், P. சுவாமிநாதன், R. செல்வகுமார், R. பாலசுப்பிரமணியன், G. முருகையன், S. சொக்கலிங்கம், S. சண்முகம் பிள்ளை, ஆகியோர் கருத்துக்களை வழங்கினர்.

திருவாளர்கள் சாரதா காலனி இந்திராணி, கூட்டுறவு நகர் இராஜாமணி, மங்கையர்க்கரசி, கீழவீதி கோவிந்தசாமி ஆகியோர் மறைவிற்கு மௌன அஞ்சலி செலுத்தியபின் கூட்டம் இனிதே நிறைவடைந்தது.

– சு. அன்பழகன்,

தலைவர்.

## செம்பொன்னார்கோவில்

சங்க கூட்டம் 06–06–2023 அன்று சங்க செயலாளர் திரு. ச. நெடுஞ்செழியன் இல்லத்தில் சங்கத்தலைவர் கூட்டத்திற்கு வர முடியாத சூழ்நிலை காரணமாக சங்க சிறப்புத் தலைவர் திரு. மு. சபாநாயகம் பிள்ளை தலைமையில் அவர்களே இறைவணக்க பாடிடவும் நெ. சரவணன் வரவேற்புரை ஆற்றிடவும், சென்ற மாத அறிக்கையை முன்னாள் மண்டல செயலாளர் திரு. கோ. வடிவேலு பிள்ளை வாசிக்கவும், வரவு–செலவு அறிக்கையை பொருளாளர் திரு. M.C. செல்வராஜ் வாசிக்கவும் கூட்டம் அதனை ஏற்றது.

சிறப்புத்தலைவர் திரு. மு. சபாநாயகம் பிள்ளை அவர்கள் உரையில் பல மாநிலங்களில் நடைபெற்ற நல்ல பல செய்திகளை தொகுத்து வழங்கியும், 28–5–23 அன்று தலைநகர் டெல்லியில் புதிய பாராளுமன்ற கட்டடத்தின் திறப்பு விழாவில் நமது தமிழ்நாட்டிற்கு சிறப்பு சேர்த்த செங்கோல் வழங்கிய சிறப்புமிகு நிகழ்வில் திருவாடுதுறை மற்றும் தருமபுரம் ஆதீன குருமகா சந்நிதானங்கள் கலந்து கொண்டு நமது

பாரத பிரதமர் அவர்களுக்கு ஆசி வழங்கி சிறப்பித்தது பற்றியும், மேலும் தமிழ்நாட்டை சேர்ந்த சுமார் 20 ஆதீன குருமகா சந்நிதானங்களை டெல்லிக்கு வரவழைத்து அவர்களுக்கெல்லாம் சிறப்புகள் செய்து கௌரவித்த நமது பாரத பிரதமர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து தமிழ்நாட்டிற்கு பெருமை சேர்த்த பிரதமர் அவர்களுக்கு சங்கம் சார்பாகவும் நன்றி தெரிவித்து பேசினார்கள். சங்க உறுப்பினரும் திருவிடைக்கழி கிராமத்தை பூர்வீகமாக கொண்ட M. சிவக்குமார் – மலர்கொடி தம்பதியினரின் மகன் மணிவண்ணன் – காவியா மணமக்கள் 01–06–23 அன்று நடைபெற்ற திருமணத்தை முன்னிட்டு சங்க கூட்டத்திற்கு வருகை தந்த மூத்த உறுப்பினர்களிடம் ஆசி பெற்று கொண்டார்கள்.

சென்ற மாத கூட்டத்தில் சங்க செயலாளர் அறிவித்தப்படி சங்க உறுப்பினர்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவிதொகை கீழ்கண்ட விவரப்படி வழங்கப்பட்டது. (2022–2023–ஆம் ஆண்டிற்கு)

| வ.எ | மாணவ/ மாணவி பெயர் | பெற்றோர் | படிக்கும் வகுப்பு | கல்வி உதவித் தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | இந்துஜா | கார்த்திகேயன் | 10–ம் வகுப்பு | 1000 |
| 2 | மதுமித்ரா | கார்த்திகேயன் | 3–ஆம் வகுப்பு | 500 |
| 3 | பிரவீன் | சங்கர் | B.Tech, Ist year | 1200 |
| 4 | பிரியதர்ஷன் | சங்கர் | 9–ஆம் வகுப்பு | 900 |
| 5 | அபிஷேக் | அருள்பிரகாசம் | 4–ஆம் வகுப்பு | 500 |
| 6 | அனன்யா | அருள்பிரகாசம் | 7–ஆம் வகுப்பு | 700 |
| 7 | ராகுல்ராஜ் | செல்வம் | பாலிடெக்னிக், IIIrd year | 1100 |
| 8 | ரத்தினகுமார் | சந்தோஷ் | 3–ஆம் வகுப்பு | 500 |
| 9 | கோபிகா | ரமேஷ் | B.E., Ist year | 1200 |
| 10 | மித்ரா | ரமேஷ் | 10–ஆம் வகுப்பு | 1000 |
| | ஆக கூடுதல் | | | 8600 |

S. நெடுஞ்செழியன்,
செயலாளர்.

## பரசலூர் :

04–6–2023 அன்று ஜூன் மாத கூட்டம் நக்கீரர் தெரு, M. ரஜினி இல்லத்தில் தலைவர் க. கோவிந்தராஜன் தலைமையில் திருமதி. விருத்தாம்பாள் இறைவணக்கம் பாட, திரு. M. ரஜினி வரவேற்புரை நிகழ்த்த கூட்டம் துவங்கியது.

செயலர் திரு. வீ. கண்ணன் சென்ற மாத அறிக்கையையும், பொருளர் திரு. M. விஜய் நிதிய அறிக்கையையும், தலைவர் திரு. க. கோவிந்தராஜன் மு.அ. நிதிய அறிக்கையையும் வாசித்து, பதிவேடுகள் அனைத்தும் சமர்ப்பிக்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டது.

சென்ற கல்வி ஆண்டில் வாழும் கர்ணன் கொடைவள்ளல் CREW நிறுவனர் கார்குலச் செம்மல் அவர்களிடம் கல்வி உதவித்தொகை பெற்ற மாணவர்கள், பெற்றோர்கள் சார்பாக நன்றி தெரிவிக்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தருமபுரம் ஆதீனத்தில் நடைபெற்ற பட்டணபிரவேச நிகழ்ச்சியிலும், திருப்பறியலூர் தட்ச சம்ஹார மூர்த்தி திருவோண நட்சத்திரத்தன்று நடந்த மகா அபிஷேகத்தில் பரசலூர் கார்குல சொந்தங்கள் பெருமளவில் கலந்துகொண்டு சிறப்பித்தனர். திருமதி. சபிதா சிவக்குமார் ஆசிரியர் உரையாற்றினார். ஆண்களுக்கான பரிசை திரு. A. ராமலிங்கம், பெண்களுக்கான பரிசை G. பானுமதியும் முறையே பெற்று திரு. M. ரஜினி, திருமதி. ஈஸ்வரி வழங்கினார்கள்.

கூட்டத்தில் கலந்துகொண்டவர்கள் அனைவருக்கும் இனிப்பு, காரம், காப்பி வழங்கப்பட்டது. கூட்டம் நடத்திய இல்லத்தாருக்கு முறையே V. சிவக்குமார், K. ராஜேஸ்வரி சால்வை அணிவித்தனர்.

கூட்டம் நடத்திய இல்லத்தாரின் தந்தை தெய்வத்திருவாளர் திரு. S. மருதவாணன் பிள்ளை அவர்களின் 7–ம் ஆண்டு நினைவு நாளானதால் அவரது ஆத்மா சாந்தி அடையவும் பிரார்த்தனை செய்யப்பட்டது. ஒரிசா ரயில் விபத்தில் உயிர் இழந்த அனைவருக்கும் இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

பேராசிரியர் V. சிவக்குமார் பிள்ளை நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவேறியது.

– V. கண்ணன், செயலர்.
Cell: 9894960438

## ஆக்கூர் :

மாதக்கூட்டம் 11–6–23 அன்று ஆக்கூர் சிவன்கோவிலில் திரு. G. பிரகதீஸ்வரன் பிள்ளை அவர்கள் முன்னிலையில் திரு. G. கலியபெருமாள் பிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திரு. S. சுரேஷ்மணி பிள்ளை இறைவணக்கம் பாடினார்கள்.

திரு. A.R.S. பிரபாகர் பிள்ளை வரவேற்புரையாற்றி கூட்ட நிகழ்வுகளை தொடங்கி வைத்தார்கள். செயலர் திரு. R. கோவிந்தராசு பிள்ளை அவர்கள் சென்றக் கூட்ட அறிக்கையினை வாசித்தார்கள். பொருளர் திரு. M. சுந்தரேசன் பிள்ளை அவர்கள் நிதிநிலை அறிக்கை சமர்ப்பிக்க, சங்கம் அதனை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது.

சங்கத்தலைவர் திரு. G. செல்வக்குமார் பிள்ளை அவர்கள், ஆக்கூர் பெருமாள் கோவில் கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற உதவிய அனைத்து கார்குல உறவினர்களுக்கும் மன நெகிழ்ச்சியுடன் நன்றி தெரிவித்தார்கள்.

மத்திய அரசின் (EWS) 10% இட ஒதுக்கிட்டை, மாநில அரசும் பின்பற்ற கேட்டுக்கொள்ளவும் ஆக்கூர், சிவன்கோவில் கும்பாபிஷேகத்தை நமது கார்குல சங்கம் ஏற்று நடத்துவது எனவும், மாதக்கூட்டத்தில் கலந்துகொள்ளும் உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரித்தல்

போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு திரு. K. முத்துக்குமார் பிள்ளை அவர்களின் நன்றியுரைக்குப்பின் அடுத்தக் கூட்ட அறிவிப்புடன் கூட்டம் இனிதே நிறைவுற்றது.

- G. செல்வக்குமார், 9942480320

## மேலப்பெரும்பள்ளம்

மேலப்பெரும்பள்ளம், கீழப்பெரும்பள்ளம் & தலைச்சங்காடு :

சங்க மாதாந்திரக் கூட்டம் 16–6–23 அன்று தலைவர் திரு. B. இலட்சுமணன் அவர்கள் இல்லத்தில் இறைவணக்கத்துடன் துவங்கியது.

சங்க கூட்டத்திற்கு வந்திருந்த உறுப்பினர்களை வரவேற்று பேசிய தலைவர், சங்க உறுப்பினர்களின் இசைவுடன் கீழ்கண்ட தீர்மானங்களை நிறைவேற்றினர்.

**தீர்மானம் :**

மேலப்பெரும்பள்ளம் ஸ்ரீ சீதளாதேவி மாரியம்மன் திருக்கோவில் மகா கும்பாபிஷேகம் 25–05–2023 அன்று சிறப்பாக நடைப்பெற்றது. கோவிலின் திருப்பணிகளில் ஆர்வத்துடன் பங்கு கொண்டு மிக சிறப்பாக உடல் உழைப்பு நல்கிய சங்க உறுப்பினர்களுக்கும், மனநிறைவுடன் நன்கொடை அளித்த நம் சங்க மற்றும் பிற கார்குல உறவுகளுக்கும் சங்கம் சார்பில் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலப் பெரும்பள்ளத்தை பூர்வீகமாக கொண்ட Late. திரு. மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களின் மகன், கடலூர் வாழ் திரு. முத்துப் பிள்ளை அவர்கள் கோவில் திருப்பணியின் போது சுமார் ரூ. 1 லட்சம் செலவில் பெயிண்ட் வாங்கி கொடுத்துடன், மகா கும்பாபிஷேகம் அன்று அனைவருக்கும் சிறந்த முறையில் அன்னதானம் வழங்கி கோவில் திருப்பணிக்காக இரவு பகலாக உழைத்திட்ட இச்சங்க உறுப்பினர்களை பாராட்டி ஒவ்வொருவருக்கும் பொன்னாடை போர்த்தி கௌரவபடுத்தினார். திரு. முத்து அவர்களுக்கு சங்கம் சார்பாக மனமார்ந்த நன்றியையும், பாராட்டுதலையும் தெரிவித்து மகிழ்கிறோம்.

தலைவரின் நன்றி உரையுடன் கூட்டம் இனிதே நிறைவுப்பெற்றது.

– பால. இலட்சுமணன், தலைவர்.

9443783743

## மணிக்கிராமம்

1–6–23 அன்று சிவன்கோவிலில் பிரதோஷ வழிபாட்டுக்குப்பிறகு தலைவர் திரு. M. சிங்காரவேலன் தலைமையில் நடைபெற்றது. சங்க செயலர் திரு. G. அன்பழகன் சிவபுராணமும், சங்க அறிக்கையையும், பொருளர் M.T. கபிலன் வரவு – செலவு கணக்குகளை படிக்கவும் சங்கம் அதை அப்படியே ஏற்றுக்கொண்டது. மாரியம்மன் கோவில் காப்பு கட்டும் நிகழ்ச்சி, தீமிதி உற்சவமும் நம் கார்குல சொந்தங்கள் மிக சிறப்பாக செய்து இருந்தார்கள் அவர்களுக்கு சங்கத்தின் மூலம் நன்றி தெரிவிக்கப்பட்டது. தெற்கு தெருவை சார்ந்த சங்கத்ததின் மூத்த உறுப்பினரும் திரு. பரமநாதன், திரு.

சேகர், திரு. பிரபாகரன், ஆகியோரின் தந்தையுமான திரு. சுப்பையாப் பிள்ளை இயற்கை எய்தியதற்கு 2 நிமிடம் மவுனம் செலுத்தப்பட்டு இரங்கல் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. இறுதியில் திரு. முரளி நன்றி கூற கூட்டம் இனிதே முடிந்தது.

- G. அன்பழகன், செயலர்.

## இலையமுது கூடம் :

சங்க கூட்டம் தலைவர் A. நடனம் அவர்கள் இல்லத்தில் 18–06–2023 அன்று இறைவணக்கத்துடன் பொருளர் திரு. S. சிவகடாட்சம் பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

பொருளர் திரு. சிவகடாட்சம் பிள்ளை அவர்களால் வரவு செலவு கணக்கு படிக்கப்பட்டு ஏற்பளிக்கப்பட்டது.

உறுப்பினர் திரு. G. சிவக்குமார் அவர்களது 25–ம் ஆண்டு திருமண நாள் விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தமைக்கு உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக்கொண்டார்.

மாநில துணைத்தலைவர் திரு. M. சிங்காரவேலன் மற்றும் மண்டலசெயலாளர் திரு. சிதம்பரநாதன் அவர்களுக்கும் பொன்னாடை போர்த்தி சிறப்பிக்கப்பட்டது. மண்டலசெயலாளர் கூட்டம் நடத்துவதின் முக்கியத்துவம் பற்றி தெரிவித்தார்கள். அவசியம் மாதம் ஒரு கூட்டம் நடத்திட அறிவுறுத்தினார்கள்.

தேநீர் வழங்கிய செயலருக்கு நன்றி தெரிவித்து தேசிய கீதத்துடன் கூட்டம் நிறைவுற்றது.

– G. சுப்பிரமணியன், செயலர்.

9443502879

## நெடுங்காடு

சங்கத்தின் ஜுன் மாதக் கூட்டம் 11–06–2023 அன்று செயலாளர் திரு. செல்வக்குமார் அவர்கள் இல்லத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் 27 உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

முனைவர். திரு. சு. இராசேசுவரன் அவர்கள் இறைவணக்கம் பாடினார். 45–ஆம் ஆண்டு சித்திரை நிறைமதிநாள் வரவு செலவு கணக்கினை திரு. முத்துக்குமாரசாமி அவர்கள் வாசித்தார். மதுரை கார்காத்தார் சங்கத்தின் சார்பில் அனுப்பப்பட்ட மங்கல சந்திப்பு கடிதம் வாசிக்கப்பட்டது.

காரைக்கால் சங்கத்தின் பத்துக்கும் மேற்பட்ட சந்தாதாரர்களுக்கு கார்காத்தார் ஒப்புரவு இதழ் தொடர்ந்து வருவதில்லை எனவும் அக்குறைபாட்டினை சரி செய்ய ஒப்புரவு இதழ் ஆசிரியருக்கு வேண்டுகோள் விடுத்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பரிசுக்குலுக்கலில் திரு. முரளி, திரு. ரமேஷ், திரு. பிரபாகர் ஆகியோர் பரிசு பெற்றனர். கார்நிதியத்தின் புதிய பொறுப்பாளர்களாக திரு. S. ராஜமாணிக்கம், திரு. S. சந்திரசேகரன், திரு. K. செல்வம் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். அடுத்த கூட்டம் வரிச்சிக்குடி, திரு. V. வேலாயுதம் பிள்ளை அவர்கள் இல்லத்தில் 02–07–2023 அன்று நடைபெறும்.

– G. செல்வக்குமார், செயலர்.

9842633663

## கும்பகோணம் :

சங்கத்தின் மாதாந்திர கூட்டம் 11–06–23 அன்று மாலை, கோடையான் தோட்டம், குடந்தை திரு. G. ராஜாராமன், இல்லத்தில் நடைபெற்றது. திரு. தி.மா. வைத்தியநாதன் தலைமை ஏற்கவும், துணை தலைவர், கும்பகோணம் மண்டலம் S. விஜயகுமார் அவர்கள் முன்னிலையில் திரு. G. ராஜாராமன் இறைவணக்கம் பாடவும் கூட்டம் இனிதே ஆரம்பித்தது.

கூட்டத்தில் சங்க செயலாளர் திரு. S. விஜயகுமார் ஏப்ரல் மாதம் நடைபெற்ற மங்கல சந்திப்பு நிகழ்ச்சி வரவு செலவு மற்றும் மே மாதம் நடைபெற்ற ஆண்டு விழா வரவு செலவு கணக்கு சமர்ப்பித்தார்கள்.

2022–23 கல்வியாண்டில் பத்தாம் வகுப்பு பொதுதேர்வில் தேர்ச்சி பெற்ற சங்க உறுப்பினர்களின் மாணவ செல்வங்களுக்கு கார்குல மாமன்றம் சார்பில் வடபழனி இளங்கோ மற்றும் உறுப்பினர்கள் சார்பில் ரொக்க பரிசும், சங்கத்தின் சார்பாக சால்வையும் தலைவர் அவர்கள் அளித்து வாழ்த்துக்களை தெரிவித்தார்கள்.

மங்கள சந்திப்பு மற்றும் 27–ம் ஆண்டு விழா வரவு செலவுக்கு ஒப்புதல் அளித்தும்,

ஆடி மாதம் 2–வது வெள்ளிக்கிழமை மகளிர் அணி சார்பில் விளக்கு பூஜை நடத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

கூட்டத்தில் கலந்து கொண்ட உறுப்பினர்கள் அனைவருக்கும்திரு. G.ராஜாராமன்குடும்பத்தினர்கள் கனிகள், இனிப்பு, காரம், மற்றும் காபி அளித்து உபசரித்தார்கள். கூட்ட முடிவில் திரு. A.S. பழனி அவர்கள் நன்றி கூற இனிதே நிறைவுற்றது.

S. விஜயகுமார், செயலாளர்.

## மதுரை

மதுரை மாவட்ட சங்க செயற்குழு கூட்டம் கடந்த 11–06–23 அன்று நடைபெற்றது. திரு. K. ராஜேந்திரன் கடவுள் வாழ்த்து பாடினார். மதிப்புரு தலைவர். திரு. இரா. மாரியப்ப பிள்ளை மற்றும் மதிப்புரு ஆலோசகர் திரு. இரா. கணேசன் இருவரும் வந்திருந்து ஆலோசனைகள் வழங்கினர்.

தலைவர் Dr. K. சிவசுப்பிரமணியன் தமது உரையில் அடுத்த மாதம் நடைபெற உள்ள மங்கள சந்திப்பிற்கு மணமகன், மணமகள் விபரங்களை பெற்றுத் தருமாறு அனைவரையும் கேட்டுக்கொண்டார்.

மேலும் உறுப்பினர்கள் முகவரி கையேட்டில் உள்ள விலாசங்களில் உள்ள திருத்தங்கள், புதிய உறுப்பினர்கள் சேர்க்கை, மறைந்த உறுப்பினர்களை நீக்குதல் போன்ற விசயங்களை பேசினார்.

செயலாளர் திரு. C.M. சொக்கலிங்கம் இந்த ஆண்டு ஏழை மாணவ மாணவியருக்கான கல்வி உதவித்தொகை பெறுவதற்கு CREW அறக்கட்டளையிலிருந்து வந்த படிவங்களை தகுதி உள்ள மாணவ, மாணவியருக்கு அனுப்புவது பற்றி பேசினார்.

கடந்த 04–06–23 அன்று இறைவனடி சேர்ந்த கூத்தியார்குண்டு திரு. சுப்பிரமணிய பிள்ளை அவர்களுக்கு நமது சங்க தலைவர், செயலாளர், பொருளாளர், துணைச்செயலாளர் நால்வரும் கூத்தியார் குண்டு சென்று அன்னாருக்கு அஞ்சலி செலுத்தினர். வரும் 30–07–23 அன்று வெளியிடப்பட உள்ள திருச்சி கார்காத்தார் சங்க பொன்விழா மலரில் நமது மதுரை சங்கத்திலிருந்து வாழ்த்து செய்தி வெளியிட ஒப்புதல் பெறப்பட்டது.

பொருளாளர் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவுற்றது.

- C.M. சொக்கலிங்கம், செயலாளர்.

## திருநெல்வேலி :

சங்கத்தின் செயற்குழு கூட்டம் 11–6–2023 அன்று கார்குல கர்ணன் வெங்கடேசன் பிள்ளை அரங்கத்தில் செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் பிற கிராம, நகர தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். தலைவர் திரு. C. சண்முகசுந்தரம் பிள்ளை அவர்கள் தனது கருத்துக்களை எடுத்துரைத்து குரு அறக்கட்டளை கல்விதொகை விண்ணப்பத்தை மாணவ, மாணவிகளுக்கு வழங்கினார். இணைச்செயலாளர் திரு. S.S. மாரியப்பன் தனது கருத்துக்களை எடுத்துரைத்து பேசினார். 25–வது வார்டு கவுன்சிலர் திரு. கிட்டு என்ற ராமகிருஷ்ணன் அவர்கள் சங்க இடம் இருந்த நிலரவரத்தையும், தற்போதைய சங்க கட்டிட வளர்ச்சி பற்றியும், சங்க கட்டிடத்திற்கு குடிநீர் இணைப்பு உத்திரவு வாங்கியது பற்றியும், அதன் செலவை தானே பொறுப்பு எடுத்துக்கொள்வதாகவும் கருத்துக்களை பதிவு செய்தார். திரு. கூடலரசன் அவர்கள் தரைமட்ட நீர்தேக்க தொட்டி கட்ட இடம் தேர்வு செய்து கட்டுவதற்கான ஏற்பாடுகளை செய்ய வேண்டும் என கருத்துக்களை பதிவு செய்தார். கல்லிடைகுறிச்சி சங்க உறுப்பினர் திரு. செந்தில்விநாயகம், தென்காசி சங்க செயலாளர் திரு. கனகராஜ், தென்காசி சங்க தலைவர் திரு. சேதுராம் ஆகியோர் உரையாற்றினார்கள். சங்க வரவு, செலவு கணக்கை பொருளாளர் சமர்ப்பித்து நன்றியுரை திருஞானசம்பந்தம் பிள்ளை அவர்கள் வழங்கினார். கீழ்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

குரு அறக்கட்டளை மூலம் கல்வி உதவித்தொகை பெற விண்ணப்பம் கார்காத்தார் சங்கம்,திருநெல்வேலி மூலம் மாணவ,மாணவிகளுக்கு வழங்கப்பட்டது.

சங்க ஆண்டு விழா மற்றும் பொதுக்குழு ஆகஸ்ட் 2023 (தமிழ் மாதம் ஆடியில்) நடத்துவதற்கு இச்செயற்குழு அனுமதியளிக்கிறது.

சங்க செயற்குழு கூட்டத்தில் தொடர்ந்து 3 முறை கலந்து கொள்ளாத நிர்வாகிகளை நீக்கம் செய்து

புதிய பொறுப்பாளர்களை தேர்வு செய்து செயல்படுத்த ஏகமனதாக இச்செயற்குழு அனுமதியளிக்கிறது.

ஆற்று குடிநீர் இணைப்பு மாநகராட்சியிலிருந்து உத்திரவுபெறப்பட்டுவிட்டது.அதனைவாங்குவதற்கும், இணைப்பை குழாய் பதித்து கட்டிடத்திற்குள் கொண்டு செல்வதற்கு ஆகும் செலவு தொகையினை தானே ஏற்றுக்கொள்வதாகவும் என பேசி வாக்குறுதி அளித்த திரு. கிட்டு என்ற இராமகிருஷ்ணன் பிள்ளை திருநெல்வேலி மாமன்ற உறுப்பினர் அவர்களை கௌரவித்து பாராட்டி இச்செயற்குழு ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றுகிறது.

ஆற்றுநீர் தரைமட்ட நீர்த்தேக்க தொட்டி சங்க கட்டிடத்திற்கு தென்புறம் நில அமைப்பிற்கு ஏற்றாற்போல் அமைக்க இச்செயற்குழு அனுமதி அளிக்கிறது.

கார்காத்தார் சங்கம், திருநெல்வேலியை ஒற்றுமைபடுத்தி ஒருங்கிணைத்து செயல்பட ஒருங்கிணைப்பு குழு அமைக்க இச்செயற்குழு ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றுகிறது.

- C. சண்முகசுந்தரம், தலைவர்.

## ஈரோடு :

சங்கத்தின் 4–வது ஆண்டு விழா 11–6–23 அன்று N.R. திருமண மஹாலில் மிக சிறப்பாக நடைபெற்றது.செல்வி. மஹிபா ஸ்ரீ இறைவணக்கம் பாட, மாவட்ட இணைச்செயலாளர் திரு. D. குமார் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்த, மாவட்ட தலைவர் திரு. A. தேவேந்திரன் அவர்கள் தலைமை உரை ஆற்ற, மண்டலச் செயலாளர் திரு. பூபதி, மகளீர் அணி தலைவி திருமதி. தேன்மொழி, மாவட்ட துணைத்தலைவர் ஜெயபாலன் அவர்கள் அனைவரின் பங்களிப்பு க சிறப்பாக அமைந்தது. மாவட்ட செயலாளர் திரு. மதியழகன் அவர்கள் செயலர் அறிக்கை வாசிக்க, பொருளாளர் திரு. ராம்குமார் கணக்குகளை தாக்கல் செய்தார்கள். மாநில அமைப்புச் செயலாளர் திரு. கைலை. சண்முகம் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்

மாநில செயலாளர் திருச்சி திரு. M. பாலசுப்ரமணியன் அவர்கள் உரையில் பல நிகழ்வுகளை பாராட்டி திருச்சி சங்கத்தின் 50–வது ஆண்டுவிழாவிற்கு அனைவரையும் கலந்துக்கொள்ள அழைப்பு விடுத்தார்கள். செயலாளர் திரு. மதியழகன் அவர்கள் அவரது துணைவியார் மற்றும் சொந்தங்கள் அனைவரின் நகைச்சுவை நிகழ்ச்சி அனைவரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தியது. மாநில தலைவர் உரையில் கார்குல கலாச்சாரம், பண்பாடு பற்றியும் குறிப்பாக இன்றைய இளைஞர்கள் தாய் தந்தையை நன்றாக பார்த்துக்கொள்ள வேண்டிய அவசியம் பற்றியும், திருமண நிகழ்வுகள் பற்றியும் விரிவாக பேசினார்கள்.

தலைமை நிலையச் செயலாளர் திரு. குமார் அவர்கள் மற்றும் திருச்சி சங்க நிர்வாகி திரு. குணசேகரன் அவர்கள் விழாவில் கலந்துக்கொண்டார்கள். பல கோடி ரூபாய் பணத்தை கார்குல உறவினர்களுக்கு கல்வி உதவியாக வழங்கும் சென்னை ராதா என்ஜினியரிங் ஒர்க்ஸ் சேர்மேன் கார்குல கடவுள், வள்ளல் உயர்திரு. S. வெங்கடேசன் பிள்ளை அவர்கள் நமக்கு செய்யும் நிதி உதவிகள் நல திட்டங்கள் பற்றியும் எடுத்துரைக்கப்பட்டு அவர்களுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது. சுமார் 120–க்கும் மேற்பட்ட சொந்தங்கள் கலந்துக்கொண்டு சிறப்பித்தார்கள்.

ஆண்டு விழா நடைபெற அரும்பாடுபட்ட சங்க தலைவர், செயலாளர், பொருளாளர், மகளிர் குழுவினர் உள்ளிட்ட பொறுப்பாளர்கள் மற்றும் விழாவில் கலந்துக்கொண்டு சிறப்பித்த கார்குல முன்னோடிகள் மாநில நிர்வாகிகள் மகளிர் அணி சொந்தங்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

## வருந்துகிறோம்

சீர்காழி நாங்கூர் திரு. கு. நடராஜன் பிள்ளை அவர்களின் மனைவி திருமதி. சித்ரா அவர்கள் 31–05–23 அன்று இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் சீர்காழி சங்கம் தெரிவித்துக்கொள்கிறோம்.

.......................

குமராட்சி ஒன்றியத்தை சேர்ந்த நெய்வாசல் கார்காத்தார் சங்க உறுப்பினரும், குமராட்சி ஒன்றிய கார்காத்தார் சங்க செயலாளராகிய திரு. இராஜ. முத்துக்குமரன் (தலைமை ஆசிரியர் ஓய்வு) அகால மரணமடைந்ததற்காக நெய்வாசல் சங்கத்தின் சார்பில் ஆழ்ந்த வருத்தத்தை தெரிவித்துக்கொள்கிறோம்.

# வருந்துகிறோம்



தோற்றம் :
16.04.1960

மறைவு :
27.05.2023

## திருமதி R. சுமதி

திருமாந்துறை மாடிவீடு, பில்லாலுட, காஞ்சிபுரம் தெய்வத்திரு முரு. பாலகிருஷ்ணன் பிள்ளை அவர்களின் மூத்த மருமகளும், சிவகங்கை பா. ரவி அவர்களின் மனைவியும், இளந்தோப்பில் பிறந்து, சிவகங்கையில் வாழ்ந்த திருமதி **சுமதி** அவர்கள் **27.5.2023** அன்று இயற்கை எய்தினார்கள் என்பதை வருத்தத்துடன் தெரிவித்து கொள்கிறோம்.

**ஊருக்கே உதவிகரமாய்
உறவுகளுக்கெல்லாம்
அடைக்கலமாய்
எப்போதும் சிரித்த முகத்துடன் இருந்து
வாழ்ந்து மறைந்த எங்கள்
அன்னையே! பணமின்றி பசியுடன் வந்தவர்க்கும்
உணவளித்து மகிழ்ந்த
எங்களின் உன்னத தாயே! இனி நீங்கள்
என்றும் தெய்வமாய் இருந்து எங்களை
காத்தருள வேண்டுகிறோம்.**

**பா. ரவி,**
சிவகங்கை மருத்துவ கல்லூரி கேன்டீன் உரிமையாளர், செல்–**9942338833**

மகள் **மு. சரண்யா** மகன் **ர. வினோத்**

மருமகன் **இரா. முத்துக்குமார்** மருமகள் **வி. விஜயலட்சுமி**

பேரன்கள் **மு. யதுநந்தன், வி. அனுஜ்சாய்**

பேத்திகள் **மு. ஹர்ஷவர்த்தினி, வி. லக்ஷனாஸ்ரீ**



மலர்ந்தது
19.10.1943

உதிர்ந்தது
18.05.2023

# பா. லலிதா அம்மாள்

வரவுகுடிக்கு வரமாய் வந்து
கீழையூர் புகுந்து புகழ் சேர்த்த
தலைமகள் இவள்

கோடையில் அவள் வீடும்
கொடையில் அவள் மனமும்
வாசல் வந்தழைக்கும் அழகு முகமும்

அனைவரையும் அரவணைக்கும்
அன்னை குணமும்
இனி இல்லை என ஏங்கும் மனம்

அவள் அன்பில்
ஆழம் கண்டவர்கள்
பிரிவிலும் அதை மறக்காமல் வாழுடும்

கணவர்
**மு. பாலசுப்ரமணியன் பிள்ளை,**
**கீழையூர்**

மகள்
**ஜெயந்தி பாண்டியன்**

மகன்-மருமகள்
**பா. செந்தாமரைகண்ணன்- ராதிகா**
**பா. சுரேஷ்குமார்- விஜயலெட்சுமி**
**பா. முத்துக்குமரன்-ஜெயசுதா**

பேரன்-பேத்தி
**அருணா சங்கர்**
**பா. விக்ரமன்-ஸ்ரீநிதி**
**செ. தரன்-சிவானி**
**சு. விக்னேஷ்**
**மு. அஜய்**
**ச. சஞ்சனா** (கொள்ளு பேத்தி)
**வி. மகிழன்** (கொள்ளு பேரன்)

# 12-ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் :
**30.05.1937**

மறைவு :
**03.08.2011**

மயிலாடுதுறை, கூறைநாடு, பெரிய மணவெளித்தெரு, தொழுதுட தெய்வத்திருவாளர்கள். S.திருமேனிப்பிள்ளை - பட்டம்மாள் அவர்களின் மூத்த குமாரரும் எங்களுடைய சகோதரரும் திருமதி. P.K. பங்கஜாட்சி (முதுகலைப்பட்டதாரி ஆசிரியை ஓய்வு அரசு பெண்கள் மேனிலைப்பள்ளி, மயிலாடுதுறை)அவர்களின் கணவரும் கல்வித்துறையில் அரும்பணியாற்றிய, பெருந்தகை தன்னலம்கருதாது குடும்பநலமே பெரிதென நினைத்த பண்பாளர், தூய சிந்தனையாளர், செந்நெறிச் செல்வர்

## தெய்வத்திரு. தி.ஸ்ரீநிவாசன் அவர்கள்

(பணி நிறைவு, கண்காணிப்பாளர் , மாவட்டக்கல்வி அலுவலகம், மயிலாடுதுறை)

*என்றும் தங்கள் நினைவலைகளில் வாழும்....*

திருமதி. B. **வேதவல்லி பாலசண்முகம்,** திருவிடைக்கழி.

திருமதி. **தி. சுந்தரி** - திரு. **திருஞானசம்பந்தம்,** பூவிழுந்தநல்லூர்.

திருமதி. **ஜெ. உமாராணி** - திரு. **ஜெயபாலன்,** மயிலாடுதுறை.

**தி. சௌந்தரராஜன்** - திருமதி. **வசந்தா,** சென்னை.

**தி. பன்னீர்செல்வம்** - திருமதி. **வசந்தா,** மயிலாடுதுறை.

**தி. செல்வகுமார்** - திருமதி. **பொன்னி,** சென்னை.

**தி. ரவிகுமார்** - திருமதி. **மலர்,** மயிலாடுதுறை.

மகன்கள், மகள்கள், பெயரன்கள், பெயர்த்திகள்
கொள்ளுப்பெயரன்கள், மற்றும் கொள்ளுப்பெயர்த்திகள்

**Posted at Pathrikachanel, Egmore**
**RNI No. TNTAM / 2009 / 30435 Regn. No. TN/CH( C) / 405 /2022 - 2024 & WPP. No. TN/PMG (CCR)/WPP-161/22-24**
**Date of Publication : 15th of Every Month**
**15th / 16th July 2023**

CHOZHA HOTELS

Hotel Kanakabhishegam
First Hotel From The Temple




Means The Best Food

Amirtham A\C Veg Restaurant
Best Food @ Thirukadaiyur
Web : www.chozhahotels.com
Mob:7299078191

**Published by : K. SHANMUGAM,** on behalf of The Karkarthar Association (Madras), From 64, 10th Street, Sowrashtra Nagar, Choolaimedu, Chennai - 600 094 and **Printed by : M. NATARAJAN** at **Mayur Printers,** No. 1/7, Gopal Street, Saidapet Road, Vadapalani, Chennai - 600 026. **Editor : S. ANBALAGAN**